|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 12 சோபகிருது வருஷ புரட்டாசி - ஐப்பசி மீ அக்டோபர் - 2023 இதழ் 10



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் சார்பில் வெளியிடுவோர் :
ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்



# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## புரட்டாசி – ஐப்பசி

மலர் 12 அக்டோபர் – 2023 இதழ் 10

பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 4 |
| வண்டு ஸ்தோத்ரம் | 7 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 10 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 15 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| பக்த மீராவின் கிருஷ்ண கீதங்கள் | 18 |
| ஐப்பசி மாத விசேஷ தினங்கள் | 19 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 20 |
| ராஜ தரங்கிணி | 23 |
| அத்வைத ஆசார்ய பரம்பரை | 26 |
| சாணக்ய ஸுபாஷிதம் | 30 |
| முன்மொழியாகிய திருவாய்மொழியும் அத்வைதமும் | 32 |
| வேதாந்த ஸம்வத்ஸரம் | 35 |
| புராணக் கதை | 37 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ | 39 |
| மகாபாரத சுருக்கம் | 41 |
| அபிதகுசாம்பா ஸ்தவம் | 44 |
| பாராயண பக்கம் | 48 |






भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்


# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா



வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்



அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் – 631502.
தொலைபேசி : 044 – 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of
Sri Kanchi Kamakoti Peetam,
No1, Salai Street, Kancheepuram - 631502.
Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

*த்ருஸா த்ராகீயஸா தரதலித நீலோதபல ருசா*

*தவீயாம்ஸம் தீனம் ஸ்னபய க்ருபயா மாமபி ஸிவே*

*அனேனாயம் தன்யோ பவதி ந ச தே ஹானிரியதா*

*வனே வா ஹர்ம்யே வா ஸமகர நிபாதோ ஹிமகர : ।।*

*ஹே! சிவே கொஞ்சம் மலர்ந்த தாமரை புஷ்பத்தின் காந்தியை ஒத்த சோபையை உடையதாயும் காதுவரை நீண்டதாயும் உள்ள கடாக்ஷத்தால் உன்னை பக்தி செய்யாமல் உனக்கு வெகு தூரத்தில் உள்ளவனாயும் தீனனாயிருக்கும் என்னையும் உன் கருணையினால் குளிப்பாட்டு. இதனால் உனக்கு என்ன ஹானி? நிலவின் ஒளி வனத்திலும் அரண்மனையிலும் ஒன்றாகத்தானே விழுகிறது.*

*ஸ்ரீ சங்கரர் - சௌந்தர்ய லஹரீ*

*ஸ்ருதீனாம் மூர்தானோ தததி தவ யௌ ஸேகரதயா*

*மமாப்யேதௌ மத: சிரஸி தயயா தேஹி சரணௌ*

*யயோ: பாத்யம் பாத; பஸுபதி ஜடாஜூட தடினீ*

*யயோர் லாக்ஷா லக்ஷ்மீரருணா ஹரி சூடாமணி ருசி:*

*ஹே அம்ப உனது எந்த சரணங்களை மறை முடியான உபநிஷத்துக்கள் முடி அணியாக தரிக்கின்றனவோ எவற்றுக்கு சிவ பெருமானின் முடிக்கற்றைகளிலுள்ள கங்கை பாத்ய நீராகிறதோ, எவற்றுக்கு திருமாலுடைய முடி மணியின் செவ்வொளி செவ்வரக்கின் சோபையாகிறதோ அந்த சரணங்களை என் முடியிலும்கூட தயையுடன் வைத்தருள்வாய்.*

*ஸ்ரீ சங்கரர் - ஸௌந்தர்யலஹரீ 94*

# ஆசிரியர் பக்கம்

அண்மையில் மக்கள் எப்படி எச்சரிகையாக இருக்க வேண்டும் எதிலிருந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று குட்டியாக ஏழு ஸ்லோகங்களைப் படிக்க நேர்ந்தது. பொய்யான நிலையைக் காட்டி உண்மை நிலையை உணர்த்துவதாக இருந்தது. அதன் விளக்கம் இந்தப் பக்கம். ‘என்னடி உலகம் இதில் எத்தனை கலகம்’ என்று ஒரு திரைப்பட பாடலில் கண்ணதாசன் எழுதியிருப்பார்.

அது உண்மையே. உலகில் நடக்கும் அவலங்களைப் பார்க்கும் போது எவ்வளவு கருமையான உலகில் வாழ்கிறோம் என்று தெரிகிறது. ஒருவருக்கு ஒருவர் அன்பு பாராட்டவும் பரஸ்பர நட்பு சாஸ்வதமாக இருக்கவும் வேதங்கள் ப்ரார்த்தனை செய்கின்றன. இருப்பினும் உலகெங்கும் குழப்பம், அமைதியின்மை, ஆவேசம் இத்யாதிகள். மன வருத்தமாக உள்ளது. சாதி வெறி, கணவனை மனைவி கொல்லுதல், மனைவியை கணவன் கொல்லுதல், தாய் சிசுக் கொலை செய்தல், காமக் க்ரோத லோபத்தால் அனுசிதமான, அடாத செயல்கள் நடக்கின்றன. சாஸ்வதமான பரம் பொருளை அறியாமல் கண்போனபடி மக்கள் கானல் நீரைப் பருக ஓடுகின்றனர்.

நாம் பார்க்கும் எந்த பொருளும், எந்த மனிதனும் , உறவும் நிலையில்லை. அவைகளை நோக்கித்தான் எல்லோரும் பயணம் செய்கின்றோம். இந்த அவலநிலையைச் சுட்டி எழுதப்பட்டுள்ள ஏழு ஸ்லோகங்களைத் தமிழில் தருகிறோம்.

ஜாக்ரத ! ஜாக்ரத! என்று முடியும் இந்த ஸ்லோகங்களை ஸ்ரீ சங்கரர் எழுதியதாகக் கூறுவர். பார்ப்போம் :

**மாதா நாஸ்தி பிதா நாஸ்தி நாஸ்தி பந்து: ஸஹோதர:**
**அர்த்தம் நாஸ்தி க்ருஹம் நாஸ்தி தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத ॥**

பணம், பொருள், உறவு முறை எதுவும் நிலையில்லை. அவைகளிலிருந்து விலகக் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஜாக்ரதை ஜன்ம துக்கம் ஜரா துக்கம் ஜாயா துக்கம் புன: புன; ஸம்சாரஸாகரம் துக்கம் தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத ॥

பிறப்பு, முதுமை, மனைவி, வாழ்க்கை இவை எல்லாம் துக்கம் தருபவை. பட்டும் படாமல் வாழ்க்கை முறை இருப்பது அவஸ்யம்.

**ஜாக்ரதை காம : க்ரோதச்ச லோபச்ச தேஹே திஷ்டந்தி தஸ்கரா:**
**ஞானரத அபஹாராய தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத ॥ 3**

ஞானம் என்னும் ரத்னத்தை அபகரிக்கும் காமக் க்ரோதங்கள் நம்மிடையே உள்ளன. எச்சரிக்கையாக இருக்கவும் ஜாக்ரதை

**ஆசயா பத்யதே லோக: கர்மணா பஹுசிந்தயா**
**ஆயு: க்ஷீணம் ந ஜானாதி தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத ॥ 4**

ஆயுளோ குருகல். ஆசையோ அளவிற்கு அதிகம். எச்சரிக்கைத் தேவை. ஜாக்ரதை

**ஸம்பத: ஸ்வப்ன ஸங்காசா: யௌவனம் குஸுமோபமம்**
**வித்யுத் சஞ்சலம் ஆயுஷ்யம் தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத ॥ 5**

பொருள் சேர்க்கை கனவு போல் தான். யௌவனம் பூ போல் தான். ஆயுள் மின்னலை ஒக்கும். எச்சரிக்கை.

**க்ஷணம் வித்தம் க்ஷணம் சித்தம் க்ஷணம் ஜீவிதமேவ ச**
**யமஸ்ய கருணா நாஸ்தி தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத ॥ 6**

வாழ்க்கை, தனம், இவை க்ஷணம் தான் . யமனுக்குக் கருணை கிடையாது. எச்சரிக்கை.

**அனித்யானி சரீராணி விபவா நேவ சாஸ்வதா:**
**நித்யம் ஸன்னிஹிதோ ம்ருத்யு: தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத ॥ 7**

உடல் நிலையானது அல்ல. கொண்டாட்டங்கள் நித்யமானவை அல்ல. யமன் அருகிலேயே உள்ளான். **தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத** நச இந்த எச்சரிக்கைகளைப் படிக்கும் போது ஒரே negativism ஆக இருப்பதாகத் தோன்றும். மேலும் நாம் என்னதான் செய்ய வேண்டும்? என்னும் கேள்வி எழும்.

இவைகளில்லாமல் வாழ்க்கை இல்லை. உண்மைதான். இவை நம்மை எப்படிப் பாடாய் படுத்தும் என்று தெரிந்து கொண்டு தாமரை இலைத் தண்ணீர் போல் இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நமது ரிஷிகள் கற்றுத்தரும் பாடம் இதுதான். ஸ்திதப் ப்ரக்யனாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். ஸ்லோகங்களில் உள்ள தடைகளைத் தவிர கருவிகள் பல இளைஞர்களின் வாழ்க்கையைக் கெடுக்கின்றன.

பெரிய வேதாந்தியாக ஆகவில்லையானாலும் பரவாயில்லை. அதம பக்ஷம் இந்த உலகில் தர்மத்தோடு வாழ்ந்தால் போதும். எனவே பேராசையைத் தவிர்த்து அளவோடு வாழ்தல் நலம் பயக்கும். 'ஜாக்ரதை' என்பதில் கூறப்பட்டவைகளை மனதில் கொண்டு வாழ முயல்வோம். வெற்றி காண்போம். அவ்வாறு சிறப்பாக வாழ்க்கையை நடத்தி காண்பித்த ஸ்ரீ சரணர்களின் பொற் பாததத்தில் இவ்விதழை ஸமர்ப்பிக்கிறோம்.


ஜய ஜய சங்கர ! ஹர ஹர சங்கர !

## கட்டுரைகள் அனுப்புவர்களுக்கு ஒரு விண்ணப்பம்

தற்போது ப்ரதீபத்தில் கட்டுரைகளை எழுத பல அன்பர்கள் விழைகிறார்கள். மகிழ்ச்சி. கட்டுரைகள் வேதம், சாஸ்த்ரம், புராண இதிஹாஸங்கள் இவைகள் சார்ந்ததாக இருக்க வேண்டும். ஸ்தோத்ரங்கள் இதுவரை வெளி வராதவைகளாக இருத்தல் நலம். புதிய கோணங்கள் வரவேற்கப்படுகின்றன. எளிய தமிழ் நடை இருத்தல் நலம். சுருக்கமாகவும் இருத்தல் நலம்.

(ஆ. ர்)

## க்ருஷ்ண பக்தர் மறைந்தார்



அண்ணா என்று பலராலும் அழைக்கப்பட்டவர், க்ருஷ்ண ப்ரேமி என்னும் நாமம் தாங்கி பாரதம் முழுவதும் பகவன் நாம ப்ராசரம் செய்து மக்களைக் கவர்ந்தவர். தன் 90 ஆவது வயதில் பகவானடி சேர்ந்தார். அன்னாருடைய இழப்பு ஆஸ்தீக உலகுக்கு பெருமிழப்பு. இன்றைய உபன்யாசகர்களுக்கு குருவாய் இருந்து வழி நடத்தியவர். மூன்று பெரியவர்களின் நற் மதிப்பைப் பெற்றவர். இன்று மறைந்து போனாலும் போனது பூத உடல் தான். புகழுடம்பு என்றுமிருக்கும். ஆஸ்தீகர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் நம் பத்ரிகை மூலம் வருத்தத்தைத் தெரிவிக்கிறோம். அன்னாரது ஆன்மா சாந்தி அடையப் ப்ரார்த்திக்கிறோம்.

# வண்டு ஸ்தோத்ரம்

**ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்**

## ப்ரஹ்ம பாவனையும் சரணாகதியும் ஒன்றே

பிற்காலத்தில் ராமாநுஜர் இந்த சரணாகதியைத் தான் முக்யமான உபாயமாக வைத்து விசிஷ்டாத்வைத மதத்தை உருவாக்கினார். ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு முக்யமானவை அஷ்டாக்ஷரம், த்வயம் என்ற இரு மந்த்ரங்களும், கீதையின் சரம ச்லோகமான ஸர்வதர்மாந் பரித்யஜ்ய ச்லோகமும், வீபீஷண சரணாகதியின் போது ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தி தம்முடைய சரணாகத ரக்ஷக வ்ரதத்தைச் சொல்கிற ராமாயண ச்லோகமும் ஆகும்.



ராமாநுஜருக்குப் பிற்பாடு வடகலை, தென்கலை என்று இரண்டாகப் பிரிந்ததும் இந்த சரணாகதிக்குள்ளேயே இருக்கிற மாறுபாடுகளை வைத்துத்தான். பூனைக் குட்டி தனக்கென்று ஒரு ப்ரயத்னமும் இல்லாமல் கிடக்கிறதல்லவா? அதைத் தாய்ப்பூனை தானாகத் தானே வாயில் கௌவிக் கொண்டு போகிறது? இம்மாதிரி நாம் பெருமாள் விட்ட வழி என்று கிடப்பதுதான் நிஜ சரணாகதி என்பது தென்கலைக்காரர்களின் அபிப்ராயம். இதற்கு 'மார்ஜார கிசோர ந்யாயம்' என்று பேர். மார்ஜாரம் என்றால் பூனை; கிசோரம் என்றால் குட்டி. ''பூனைக்குட்டி முறை''தான் – தென்கலை. வடகலைக்காரர்களின் அபிப்ராயம் என்னவென்றால்; 'குரங்குக்குட்டி என்ன பண்ணுகிறது? அதுதானே தாய்க் குரங்கை இறுகக் கட்டிக்கொண்டிருக்கிறது? இந்த மாதிரி நாமேதான் ப்ரயத்னம் பண்ணி பகவானைப் பிடித்துக் கொள்ள வேண்டும். இந்த ஒரு யத்னம் தவிர பாக்கி

விஷயங்களில்தான் அவன் விட்ட வழி என்று இருக்க வேண்டும் என்று 'மர்க்கட கிசோர ந்யாய'மாக இவர்கள் சரணாகதியைச் சொல்கிறார்கள். 'மர்க்கடம்'-குரங்கு மர்க்கட கிசோர ந்யாயம்'-குரங்குக் குட்டி முறை.

இரண்டிற்கும் basic - ஆக (அடிப்படையாக) இருப்பது சரணாகதி.

'தானே ப்ரஹ்மம்' என்கிற ப்ரஹ்மபாவனை ஞான மார்க்கத்துக்கு மையமாக இருக்கிற மாதிரி,'தான் ஒன்றுமே இல்லை' என்று பகவானிடம் சரணாகதி செய்து கிடப்பது பக்தி மார்க்கத்துக்கு மையமாக இருக்கிறது. இருக்கிறது. இந்த இரண்டும் ஒன்றேதான்.

அதெப்படி? ஒன்றுக்கொன்று மலைக்கும் மடுவுக்குமாக அல்லவா இருக்கிறது?' என்று மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோது தோன்றும். ஆழ்ந்து பார்த்தால் இரண்டும் ஒன்றுதான். 'தானே ப்ரஹ்மம்' என்கிற போது சொல்கிற தான்' வேறு; 'தான் ஒன்றுமே இல்லை' என்கிறபோது சொல்கிற 'தான்' வேறு! தானே ப்ரஹ்ம்ம் என்று அத்வைதி சொல்கிற போது தன்னுடைய சரீரம், இந்த்ரியம், புத்தி, மனஸ் இந்த எதுவும் நிஜமானதான் இல்லை என்று தள்ளி விட்டு, மிஞ்சி நிற்கிற ஆத்மாவைத்தான் ப்ரஹ்மம் என்கிறான். 'ஸாதாரணமாக எந்த ஜீவாத்மாவும் அஞ் ஞானத்தினால் ''தானாக'' நினைக்கும் இந்த சரீரம், இந்த்ரியம்: புத்தி, மனஸ் இதுகளிலிருந்தெல்லாம் நாம் விடுபட வேண்டும். இவை இழுத்துக் கொண்டு போகிறபடி ஓடாமல் இவற்றை இறைவனின் பொற்பாத கமலங்களில் ஒன்றுமேயில்லை என்கிற மாதிரி கிடத்திவிட வேண்டும்', என்கிற அர்த்தத்தில்தான் 'தான் ஒன்றுமேயில்லை' என்று பக்தி மார்க்கக்காரன் சரணாகதி பண்ணுகிறான். அத்வைதி ''தானாக''ச் சொல்லும் ஆத்மாவுக்கு அந்யமாக அவன் தள்ளுவதையேதான் த்வைத, விசிஷ்டாத் வைதிகள் 'தான்' என்று வைத்து பகவானின் பாதத்தில் தள்ளுகிறார்கள்! ஆகையால் இரண்டும் ஒன்றுதான். அஹங்காரம் (ego) போக வேண்டும் என்பதுதான் இரண்டு மார்க்கத்துக்கும் பொதுவான லக்ஷ்யம்.

அத்வைத பாஷ்யங்களிலும் ப்ரகரண க்ரந்தங்களிலும் மார்க்கத்தைச் சொன்ன ஆசார்யாள் இங்கே பக்தராக இருந்து, அதே லக்ஷ்யத்துக்கு சரணாகதியை வழியாகச் சொல்லியிருக்கிறார் : 'சரணம் கரவாணி தாவகௌ சரணௌ-உன் இணையடிகளில் சரணாகதி செய்கிறேன்'' என்கிறார்.

''கருணாமய'' என்றதால் கருணைக் கடலான பகவான் சரணாகதனை நிச்சயம் ரக்ஷிப்பான் என்று உணர்த்துகிறார்.

**நாராயண கருணாமய**

முதல் ச்லோகத்தில் 'விஷ்ணோ' என்று ஆரம்பித்து விட்டு, ஆறாவது ச்லோகத்தில் 'தாமோதர' என்று க்ருஷ்ணாவதாரத்தைச் சொல்லி அழைத்தவர், இங்கு 'நாராயண என்கிறார். மதத்தின் பெயரைப் பார்க்கும் போது 'விஷ்ணு'வின் பெயரை வைத்து அது 'வைணவம்' எனப்பட்டாலும், அதற்கு முக்யமான அஷ்டாக்ஷரீ மந்த்ரத்தில் 'நாராயண' நாமம் வருகிறது. 'கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம் என்று ஆழ்வாரும் பாடியிருக்கிறார். ஆசார்யாளே தமது அத்வைத பாஷ்யங்களில் ஸகுண ப்ரஹ்மத்தைச் சொல்லும் போது நாராயணன் என்றே குறிப்பிட்டிருக்கிறார். ஸந்யாஸிகளுக்கு யார் நமஸ்காரம் பண்ணினாலும் அவர்கள் 'நாராயண நாராயண' என்றே ஆசீர்வதிக்கணுமென்று அவர் ஏற்பாடு பண்ணியிருக்கிறார்.

இங்கே ஆசார்யாள், நாராயணனின் சரணத்தை நான் சரணடைகிறேன் என்கிறார் அல்லவா? இதே அர்த்தத்தில் தான், ஏறக்குறைய இதே வார்த்தைகளிலேயே வைஷ்ணவர்களின் த்வய மந்த்ரம் இருக்கிறது.

இந்த மாதிரி அத்வைத, விசிஷ்டாத்வைத ஒற்றுமைகளைப் பார்க்கிற போது ரொம்பவும் ஸந்தோஷமாயிருக்கிறது.

இனி கவலை வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய
(Reprint or Letterpress Books)
ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு, etc.
ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களை
புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.
(Without Re-typeing, no proof reading)
விவரங்களுக்கு : **V.K.N. Enterprises, Mylapore,**
**Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com**
We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages.
Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc.
Contact above address.

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## சிறப்பு அருளுரைகள்


ஒருவன் கோயிலுக்குப் போய் விடுவான். ஒருவன் சர்ச்சுக்குப் போய் விடுவான். ஒருவன் மசூதிக்குப் போய் விடுவான். அந்தந்த நேரங்களில் அவரவர் வழிபாடுகளுக்குப் போய் விடுவார்கள். அவர்களுக்குள் சண்டை சச்சரவுகளும் கிடையாது.

ஒருவருக்கு ஒருவர் மதங்களைப் பற்றி ஏளனமாகவோ, திட்டியோ பேச மாட்டார்கள். அவ்வளவு பிரியமாக ஒற்றுமையாக இருந்தார்கள். அது தான் இந்து மதத்தினுடைய பெருமை. இந்தியாவின் பெருமை.

எந்த மதமாக இருந்தாலும் அவரவர் தனி வழிபாட்டு முறையை அங்கீகரித்துக் கொண்டு, எல்லா மதத்தினரும் ஒற்றுமையாக இருப்பதே நம்முடைய தனிப் பெருமை.

அப்படித்தான் அந்தக் காலம் தொட்டே இந்தியா இருந்து வருகிறது.

அந்த மூன்று பேரும் சேர்ந்து ஒருநாள் ஆற்றில் குளிக்கப் போனார்கள். அங்கே காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.



வெள்ளத்தில் இறங்கி மூன்றுபேரும் குளித்தார்கள். குளிக்கும் போது மிகப் பெரிய வெள்ளம் பாய்ந்து வந்து அந்த மூன்று பேரையுமே அடித்துக் கொண்டு போய்விட்டது.

ஒருவன் ‘அல்லா அல்லா’ என்றான். ஒண்ணையும் காணோம்.

ஒருவன் ‘இயேசு... இயேசு’... என்றான். ஒண்ணையும் காணோம்.

இன்னொருவன்

‘ராமச்சந்திரா, விநாயகா, முருகா...’ என்று கத்தினான்.

அவனுக்கும் ஒண்ணையும் காணோம்.

மூன்று பேரும் வெள்ளத்திலே போய்க் கொண்டிருந்தார்கள்.

மூன்று பேரையும் ஒன்றாக அடித்துச் சென்று விட்டதால் யாருக்குமே நல்ல பேரும் இல்லை; கெட்ட பேரும் இல்லை.

இன்னொரு பெரிய காட்டாற்று வெள்ளம் வந்தது. அந்த மூன்று பேரில் ஒருவனை மட்டும் கரையை நோக்கி தள்ளிவிட்டு விட்டுச் சென்றது. அந்தச் சமயம் கரையில் இருந்த மரம் ஒன்று சரிந்து தண்ணீரில் விழுந்தது.

அவன் அந்த மரத்தைப் பற்றிக் கொண்டு மேலே ஏறி, கரையில் வந்து குதித்தான். கரைக்கு வந்ததும் 'கடவுளே என்னைக் காப்பாற்றி விட்டாய்' என்று மகிழ்ச்சியோடு கத்தினான்.

அவன் ராமச்சந்திரா என்றோ, விநாயகர் என்றோ, முருகா என்றோ கூப்பிடவில்லை.

அவன் சாமான்ய வாழ்வில் பெயர் சொல்லிக் கூப்பிடும் சாமிகளை, ஆபத்தான நேரத்தில் ஒரே தெய்வமாகக் கருதித்தான் 'கடவுளே' என்றான்.

இப்போதும் நாம் எத்துணையோ சாமிகளைக் கும்பிடுகிறோம். ஆனால் கடவுள் கஷ்டத்தைக் கொடுக்கிறார் என்கிறோம்.

ஆக்ஸிடெண்ட்டுல ஒருவன் சிக்கித் தப்பிச்சு வந்தான்னா... 'கடவுளாலதான் நான் தப்பிச்சேன்' என்பான். அவன் பிள்ளையாரைக் கும்பிடுபவனாக இருப்பான். ஆனால் அந்த நேரம் 'பிள்ளையாரால் தான் பிழைத்தேன்' என்று சொல்ல மாட்டான். 'கடவுள்' காப்பாற்றினார், என்பான்.

அவரவர் வழிபாட்டு முறையில் என்னென்ன பெயர்கள் இருந்தாலும் உள்ளூர உணரும் போது ஒரே பொருள்தான் வரும். கடவுள் என்ற அந்த ஒரே உணர்வுதான் வரும்.

ஆபத்துக் காலத்தில் தப்பிக்கும் போது ராமச்சந்திரன், முருகன், பிள்ளையார் போன்ற பெயர்கள் நினைவுக்கு வராது. 'கடவுள் காப்பாற்றிவிட்டார்' என்றுதான் மொத்தமாக வரும்.

ஆக எல்லா வடிவத்திலும் ஒரு இந்துவானவன் பொதுவான கடவுளைத்தான் பார்க்கிறான்.

கோயில்களுக்குப் போகும்போது மட்டும் தனித் தனி வடிவங்களைப் பார்க்கிறான். ஆபத்து, நல்லது கெட்டது வரும்போது 'கடவுளே' என்றுதான் பொதுவாகக் கூப்பிடுவான்.

இப்போதும்கூட எல்லோருமே கஷ்டம் வரும் போது 'கடவுள் சோதிக்கிறான்' என்பார்கள். விநாயகர் சோதிக்கிறார் என்று

சொல்ல மாட்டார்கள். முருகன் சோதிக்கிறார் என்றும் சொல்ல மாட்டார்கள். -கடவுளையே ஒத்துக் கொள்ளாதவன்கூட ஒரு ஆக்ஸிடெண்ட்டிலே இருந்து தப்பித்து விட்டால் கடவுள்தான் காப்பாற்றினார் என்று கூறுவான்.

அதுபோல, பல வடிவங்கள் இருந்தாலும் அது ஒரு வழிபாட்டுக்காகத்தான். அப்படி வழிபாட்டுக்காகப் பல வடிவங்கள் இருந்தாலும் உள்ளுக்குள்ளே ஊடுருவி அருவமாக இருக்கக்கூடிய இறைவனுடைய அருளை இந்துக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதுதான் இந்து மதத்தினுடைய தனி விசேஷம். சரி, ஆற்று வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்ட மூன்று பேரில் முதலாவதானவன் இந்து சமயத்துக்காரன் கரையேறி விட்டான்.

மற்ற இரண்டு பேரின் கதி என்னவாயிற்று? இரண்டு பேருக்குமே உருவ வழிபாடு இல்லாததால் அவர்களை ஆறு வேண்டும் என்று அடித்துக் கொண்டு போய்விட்டது. உருவம் இருந்தால்தான் கூப்பிடும் போது ஓடி வர முடியும். நீந்திக் காப்பாற்ற முடியும். கை கொடுத்துக் கரையேற்றி காப்பாற்ற முடியும்.

அருள் கொடுப்பதற்கு என்று ஒரு என்று வடிவம் வேண்டாமா? நிர்க்குணமாக இருந்தால் எப்படி அருள் பண்ண முடியும்?

மாற்று மதத்தினர் என்னென்னவோ பேசுகிறார்கள். எங்களிடம் வந்தால் எல்லாமே நல்லாகும். காது கேளாமல் இருந்தால் காது கேட்கும் என்கிறார்கள். அவர்கள் சாமிக்கு உருவமே இல்லை. காதே இல்லாமல் இருந்தால் அந்தச் சாமி எப்படி நமக்குக் காது கொடுக்கும்...?

கண், மூக்கு, கை, கால், காதே இல்லை மாற்று மதத்தினரின் சாமிக்கு. எப்படி நம்ம ஆட்களுக்கு அதையெல்லாம் தர முடியும்? அதற்காக ஜெபம் பண்ணுகிறார்களாம். காரணம் அது பிரசாரம். நமக்கு அது தெரியவில்லை.

எங்கே காது இருக்கிறதோ, அங்குபோய் சொன்னால்தான் நமக்கு நல்லது கிடைக்கும். எங்கே வாய் இருக்கிறதோ அங்கே போய்ச் சொன்னால்தான் அந்த வாயிலிருந்து அருள்வாக்கு கிடைக்கும். வாய், கண், காது என்று எல்லாம் இருந்தும் அதை எல்லாம் இல்லாமல் ஆக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தால் என்ன கிடைக்கும்?

கண், காது, மூக்கு, வாய், முகம், கை, கால்கள், உடம்பு எல்லாம் இருந்து- அவற்றை எல்லாம் உயர்ந்த நிலையில் வைத்து, கடவுளை உணர்ந்து அதன் மூலம் கடவுள் அருள்பாலிப்பதே இந்து சமயத்தின்

உயர்ந்த அம்சம். அதனால்தான் நம்முடைய கோயிலுக்குப் போனால் வெறும் ஹால் மட்டும் இருக்காது. அங்கே இறைவனின் வடிவு இருக்கும். விநாயகர் இருப்பார், முருகன் இருப்பார், துர்க்கை இருப்பாள், தட்சிணாமூர்த்தி இருப்பார், சண்டிகேஸ்வரர் இருப்பார், அவர்கள் நமக்கு அங்கிருந்து அருள் பாலிப்பார்கள். அவர்கள் எல்லாம் திருக்கோயில்களில், தம்மைத் தேடி வரும் மக்களுக்கு அருள் பாலிப்பதற்காகத்தான் காத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

மற்ற மதங்களில் என்ன இருக்கும்? பெரியதாக ஒரே ஒரு ஹால் மட்டுமே இருக்கும். அந்த ஹாலில் போய் மண்டி போட்டுக் கொண்டு 'இயேசுவே... அல்லாவே' என்று பிரார்த்தனை பண்ணுவார்கள் பிறகு கலைந்து போய் விடுவார்கள்.

அதைக் கேட்பதற்குக்கூட அங்கே யாரும் இருக்க மாட்டார்கள். எந்த ஒரு வடிவமும் இருக்காது. வருவார்கள். கும்பிடுவார்கள். எழுந்து போய்விடுவார்கள்.

மண்டிபோடுவதற்கு அங்கேதான் போக வேண்டும் என்பது இல்லை. எங்கு வேண்டுமானாலும் போடலாம். வீட்டில் கூட நினைக்கும் போதெல்லாம் போடலாம்.

ரம்ஜான் சமயம் பார்த்தால் கடற்கரையில் நூற்றுக்கணக்கான முகமதியர்கள் மண்டி போட்டுத் தொழுகை நடத்துவார்கள். 'நமாஸ்' பண்ணுவார்கள்.

நாமும் அப்படிப் பண்ண முடியாது! நமக்குக் கோயில்கள் இருக்கிறது. அங்கே வடிவங்கள் இருக்கின்றன. அந்த வடிவங்களுக்கு விளக்கு ஏற்றி, மலர் மாலைகள் சூடி, அர்ச்சனை செய்து, மணி அடித்து, தீபாராதனை காட்டி வழிபடுவோம்.

நம் கோயில்களில் பிரசாதமும் கிடைக்கும். மற்ற மதக் கோயில்களில் பிரசாதம் கிடையாது. அவர்கள் ஹாலில் வந்து கஷ்டங்களைச் சொல்லிவிட்டுப் போய் விடுவார்கள். அவ்வளவுதான்.

நம் இந்து மதக்கோயில்களில் நம்முடைய குறைபாடுகளைச் சொல்லி அழுது முறையிட்டு விபூதி, குங்குமம் வாங்கிப் பூசிக் கொண்டு, தீர்த்தமும் வாங்கி குடித்துவிட்டு வரலாம்.

தனிச் சிறப்பு என்னவென்றால்...

> **'அருவமும் உருவமுமாகி,**
> **அனாதியாய் பலவாகி...'**

நம் வழிபாட்டு முறை இருக்கிறது.

கல்கண்டு இருக்கிறது. கல்கண்டு கண்ணால் பார்க்கக் கூடிய பொருள். கவர்ச்சியான பொருள்.

ஸ்வீட்டுகள் பட்சணக் கடைகளில் விற்கிறது. லட்டு, மைசூர்பாகு, ஜாங்கிரி, அல்வா என்று விதம் விதமான என்னென்னமோ ஸ்வீட்களை விற்கிறான். அவற்றிற்கெல்லாம் என்னென்னவோ பெயர்களும் இருக்கிறது. வடிவங்களும் வெவ்வேறு, அவற்றின் விலைகளும் வெவ்வேறு. ஆனால் சாப்பிட்ட பிறகு?

ஒரே இனிப்புதான் இருக்கும்.

அங்கே இத்தனை பெயர்களும் கரைந்து போய் விடும். கற்கண்டு- பார்க்கிறோம், சாப்பிடுகிறோம். அதிலே இனிப்பு இருக்கும். வெளியே தெரியாது. வாயில் போட்டால்தான் தெரியும்.

அதுபோல உருவத்தைக் கண்ணால் பார்க்கிறோம். உருவத்துக்கு உள்ளே சக்தியைப் பார்க்க முடியாது. அது அருவமாகத்தான் இருக்கிறது.

அந்த அருவம் சாமான்யமான மனிதர்களுக்குத் தெரிவது கஷ்டம். அதற்காகத்தான் அந்த மாதிரி வடிவங்களை மகான்கள் ஏற்படுத்திக் கொடுத்து வழிபாட்டு முறைகளையும் அமைத்துத் தந்தார்கள்.

நம்முடைய இந்து மதத்திலே குரு வழிபாட்டை இன்றியமையாததாக வைத்திருக்கிறோம். நமக்கு ஞானத்தைப் போதனை வடிவமாகக் கொடுப்பதற் காகவே தட்சிணாமூர்த்தி இருக்கிறார்.

உபதேசம் மூலமாக கேட்டுத்தான் ஒவ்வொரு வரும் நல்ல அருளை அடைய வேண்டும்.

மின்சக்தி இருக்கிறது. அது தனியாக இருந்தால் பேசாது. மத்தியில் ‘மைக்’ இருந்தால்தான் அதன் மூலமாகப் பேசும்.

அதுபோலத்தான் இறையருளையும் நேரடியாக நாம் வாங்க முடியாது.

அந்த இறையருளை, குருவருள் மூலமாக, குருவடிவின் மூலமாக வாங்க வேண்டும். அதற்காகவே குருவழிபாடு ஏற்பட்டது. பழங்காலந்தொட்டு குரு வழிபாடு நம் இந்து மதத்தில் வருகிறது.

மைக் மூலமாகப் பேசுகிறோம். கரண்ட் இல்லா விட்டால் ‘மைக்’ இருந்தும் பிரயோஜனம் இல்லை, பேச முடியாது. கரண்ட் இருந்தும்கூட மைக் ஒர்க் பண்ணாவிட்டல் பேச முடியாது. மின்சாரத்தைக் கண்ணால் பார்க்க முடியாது.


கரண்டிலே கை வைத்தால் ‘ஆ...’ வென்று கத்துவான். அப்போதுதான் மின்சாரத்தைப் பற்றி உணர்வான். அது எப்படி இருந்தது? என்று கேட்டால் அவனால் சொல்ல முடியாது. நீயும் போய் மின்சாரத்திலே கையை வைத்துப் பார் என்பான்.

(தொடரும்)

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

குருர் ப்ரஹ்மா குருர்விஷ்ணு: குருர் தேவோ மகேஷ்வர:
குரு: ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நாம:
ஸ்ருதி ஸ்ம்ருதி புராணாநாம் ஆலயம் கருணாலயம்
நமாமி பகவத் பாத சங்கரம் லோக சங்கரம்.



அபார கருணா சிந்தும் ஞானதம்
சாந்த ரூபினம்
ஸ்ரீ சந்திரசேகர குரும்
ப்ரணமாமி முதாந்வநம்
சதாசிவ் சமாரம்பாம்
சங்கராச்சாரிய மத்யமாம்
அஸ்மத் ஆசார்ய பர்யந்தாம்
வந்தே குரு பரம்பராம்.

இன்று வெள்ளிக்கிழமை, காஞ்சி மஹாஸ்வாமிகள் ஜெயந்தி உற்சவம், சந்திரமானம் படி இன்று பக்தர்கள் அங்கங்கே பூஜைகள், பாராயணம் அனைத்தும் குருபக்தியுடன் செய்து வருகிறார்கள். குரு பக்தி, குருகுல வாசம், உபதேசம் நமது பாரத தேசத்திலே மனிதர்கள் நன்றாக வாழ, நல்ல வழியில் செல்ல, புருஷார்த்தம் அடைய பக்தர்கள் ஆங்காங்கே பூஜைகள், பாராயணம் செய்வது நமது நாட்டிலே பல வருடங்களாக வரும் பாரம்பரியம்.

கிருஷ்ண பரமாத்மா, சாந்தீபனி ஆஷ்ரமம் சென்று குருவிற்கு சேவை செய்து, அனைவருடன் கலந்து படித்து , அவருடன் படித்த குசேலருக்கு, சரியான சமயத்தில்

விசேஷ அனுக்ரகம் செய்தது நாம் பார்க்கிறோம். குரு குல வாசம் செய்தவர்கள் மத்தியில் அனைவருக்கும் புண்ணியம் - க்ரம படிப்பு, சேவை மனப்பான்மை, ஆதரவு எண்ணம்-மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ, ஆசாரிய தேவோ பவ, அதிதி தேவோ பவ - உபநிஷத்தில் ஆத்மா குணங்களை விவரித்து, மனிதர்களுக்கு நல்ல குணம் இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அந்த மாதிரியான நல்ல குணங்கள், குரு குல வாசத்தில் தொடர்ந்தது. பாவம், ஸ்வபாவம் நமக்கு வர வேண்டும். இந்த சங்கல்பம் செய்ய வேண்டும். இதை நமது வாழ்க்கையில் இலட்சியமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். அந்த நிர்ணயம், குருகுல வாசத்தில் வரும். அங்கிருந்து தொடங்கிய நற்குணம், நமது நாடு முழுவதும் பரவி உள்ளது. நமக்கு பாதை காட்டியது, வழிகாட்டியது வேதம், சாஸ்திரங்கள்.

இதைப் போன்ற குணங்கள், சூக்ஷ்ம தாத்பரியங்கள் அனைத்தையும் சரளமாக, அன்புடன், உதாரணத்துடன் வாழ்ந்து நமக்கு வழிகாட்டியவர், சங்கர பகவத்பாதர். அவர் அன்று செய்த அத்வைதப் பிரசாரம், ஷண்மத ஸ்தாபனம், சேவை மனப்பான்மை என்று அனைத்திலும் இந்து சமயத்திலும், 1894 முதல், நமது காஞ்சி ஸ்வாமிகள், மஹாஸ்வாமிகள், நடமாடும் தெய்வமாக நமது மத்தியில் இருந்து , உபதேசம் செய்து 27 சாதுர்மாஸ்யம் அனுஷ்டானம் செய்து ; சாதுர்மாஸ்ய அனுஷ்டானம் மற்றும் அல்ல, தினமும் அனுஷ்டானம் செய்து, மௌனமாய் இருந்து, உபதேசம் செய்து, சஞ்சாரம் செய்தவர். மக்களுக்கு என்னென்ன உபகாரம் செய்ய முடியும் என்று எப்பொழுதும் சிந்தித்தவர். இந்த அற்புதமான சனாதன தர்மத்தை எப்பொழுதும் உபதேசம் செய்து, வெளிநாட்டிற்கு சென்றவர்களாய் இருந்தாலும் சரி, வெவ்வேறு மதத்தை சேர்ந்தவர்களுக்கும், வேறு நாட்டவற்கும் தர்மத்தைப் பற்றிச் சொல்லி, சாத்வீகமான வழியில், சமுதாயத்தில் இருந்து, சமுதாயத்தில் ஆன்மீக, தார்மீக சமுதாயத்திற்காக வாழ்ந்தார்கள். பொது மக்கள் அனைவருக்கும் தர்மம் பற்றி ஆர்வம் வர வேண்டும் பாரதியர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற ஆலோசனை செய்ய வேண்டும் என்று நினைத்தார்கள்.

தினமும் நாம் பூஜைகள் செய்ய வேண்டும். நாம் வேதத்தை பாதுகாக்க வேண்டும். சாஸ்திரங்கள் படிக்க தயார் செய்ய வேண்டும். சாஸ்திரம் பிரசாரத்திற்கு கொண்டு வர வேண்டும். ஆத்மார்த்த பூஜை வீட்டில் செய்து கொள்கிறார்கள். கிராமத்தில் பரமார்த்த பூஜை செய்கிறார்கள். வீட்டில் சிவ பூஜையோ, ஜெபமோ, பாராயணமோ செய்ய வேண்டும். சாஸ்திரங்களை அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். கர்ம மார்க்கம் எது

என்று ஆலோசனை செய்து, அதிலேயே பக்தி ஸ்ரத்தையுடன் செய்ய வேண்டும். உபன்யாசம் மூலம் சாஸ்திரத்தைப் பற்றி கூறினார். அவர் அனுக்ரகம் மூலம் செய்தது வேறு சஞ்சாரம் செய்து கூறிய விஷயங்கள் வேறு. அதிகாரிகளுக்கு அளித்த விஷயம் வேறு.

இந்த தேச நிர்வாகம் முக்கியம் சாஸ்திரம் முக்கியம். சமஸ்க்ருதம் அனைவரும் படிக்க வேண்டும். மற்றும் திருப்பாவை, திருவெம்பாவை படிக்க வேண்டும் அனைவரையும் ஆதரித்து, அவர்களுக்கு வெள்ளிக்காசு தந்து ஆதரித்தல். ராம நாமம் எழுதுதல், இது மட்டுமன்றி, தேச விதேஷ உறவுகள் சம்பந்தம், பிற தேசங்களின் நல்லிணக்கணம், தேசத்தின் கௌரவத்திற்க்கும், உலக அமைதிக்கும், தர்மத்திற்கும், நித்ய அனுஷ்டானதிற்கும் சாஸ்திரிய முறையில், சாஸ்தர முறையில் வழிகாட்டினார். மகாபெரியவா பதிமூன்று வயது முதல் நித்ய அனுஷ்டானம், சந்திர மௌலீச்வர பூஜை, எல்லாவிதமான சந்தர்பத்திலும், காசி யாத்திரை, மற்றும் எங்கெல்லாம் சென்றாரோ, பாதயாத்திரை கர்நாடக, மகாராஷ்டிரா, ஆந்திரா மற்றும் நாடு முழுவதும் சென்று, மனிதர்களுக்காக, நாட்டிற்காக, உலகிற்காக, உலக நன்மைக்காக ரிஷியாக நடமாடும் தெய்வமாக வழிகாட்டினார். பரோபகாரமாக, வித்யா மூலமாக, உபாசனம் மூலமாக அனைவருக்கும் உபகாரம் செய்தார்-படித்தவர்கள், படிக்காதவர்கள், மனசில் பக்தி பாவம், சேவா பாவம். நாம் அவதாரம் குறித்து புராணத்தில் படிக்கிறோம். ஆதிசங்கரர் அவர்களுக்குப் பின் நாட்டிற்க்கும், மக்களுக்கும், சமுதாயத்திற்கும், உலகத்திற்கும் பணிசெய்தவர் மகாபெரியவா அவர்கள். அதனால், ஆத்மீக விழிப்புணர்வு ஏற்பட்டது. நமது நடமாடும் தெய்வத்திற்கு ஸ்மரணம், தியானம், பூஜை, பாராயணம் செய்து, நமக்கு இன்றைக்கு தேவையான ஆரோக்கியம், ஆஸ்திக சக்தி அனைவருக்கும் குருபக்தி மூலம், திருவருளுடன் கிடைக்கட்டும். அனைவருக்கும் சனாதன தர்மத்தில் நிஷ்டை ஞானம் அனைவருக்கும் கிடைக்கட்டும்.

# பக்த மீராவின் க்ருஷ்ணா கீதங்கள்

**தோ தின் கா நிஜ்மான் என்னும் பாடல்**



நாங்கள் இரு தினங்களுக்கு அதிதியாக வந்துள்ளோம். எதற்கு எல்லோருடனும் சண்டை சச்சரவு நாங்கள் இரு தினங்களுக்கு அதிதியாக வந்துள்ளோம். ஹம்ஸ தூளிகா மஞ்சத்தில் இன்று படுப்பவன் நாளை மரணப் படுக்கையில் இருப்பான். பிறந்தவன் இறப்பது நிச்சயம். அத்தன் அன்னை மனைவி துக்கப்படுவர். ஆண்டியும் போவான் அரசனும் போவான். அசுர பலம் கொண்ட கும்பகர்ணன் எங்கே ? புழு பூச்சிகள் ப்ரம்மா அனைவரும் ப்ரளயத்தில் போவர். அதனால் கிரிதரனைப் பாடுங்கள் என்று மீரா சொல்கிறாள். ராமனைத் த்யானம் செய்யுங்கள்.

★★★★

**திக் ஹை ஜக் மே ஜீவன் என்னும் பாடல்**

**இந்த உலகில் ப்ரார்த்தனை இல்லாத ஜீவனம் வீண்**

உன்னைப் பெற்றவள் உன்னை ஈன்றதும் உவகை கொண்டாள். நீயோ ப்ராத்தனை இல்லாத வாழ்க்கையினால் அவளுக்குப் பாரமானாய். காக்கையும் குயிலும் ஒரே நிறம் தான். கூவும் போதுதான் வித்யாஸம் தெரிகிறது. காக்கை கரையும் குயிலோ கூவும். ப்ரார்த்தனை இல்லா வாழ்க்கையா?

புனரபி ஜடரே சயனமா

ஏன்னுரையைக் கேள்

ஸம்சார ஸாகரத்தைக் கடப்பது கடினம்.

உனக்கு நாவாயும் வேண்டும், செலுத்த நாவாயோட்டியும் வேண்டும்.

மீரா சொல்கிறாள்'' கிரிதரன் புகழ் பாடு மாயா உலகைத் தள்ளி ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டு.

# ஐப்பசி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 18-10-2023 | புதன் | அனுஷம் தேர் ; அனுஷம் வேத பாராயணம் |
| 20-10-2023 | வெள்ளி | மூலம் தேர் ; மூலம் வேத பாராயணம் |
| 22-10-2023 | ஞாயிறு | உத்ராடம் தேர் ; உத்ராடம் வேத பாராயணம் |
| 23-10-2023 | திங்கள் | அவிட்டம் தேர் ; ஸரஸ்வதி பூஜை |
| 24-10-2023 | செவ்வாய் | அவிட்டம் வேத பாராயணம் விஜயதசமி |
| 25-10-2023 | புதன் | ஏகாதசி |
| 26-10-2023 | வியாழன் | த்வாதசி ; ப்ரதோஷ பூஜை |
| 28-10-2023 | சனி | பௌர்ணமி பூஜை ; அன்னாபிஷேகம் ; சந்த்ர க்ரஹணம் |
| 01-11-2023 | புதன் | சங்கடஹர சதுர்த்தி |
| 09-11-2023 | வியாழன் | ஏகாதசி |
| 10-11-2023 | வெள்ளி | யம தீபம் ; த்வாதசி ; ப்ரதோஷ பூஜை |
| 12-11-2023 | ஞாயிறு | தீபாவளி பண்டிகை ; லக்ஷ்மி பூஜை ; ஸ்வாதி வேத பாராயணம் |
| 14-11-2023 | செவ்வாய் | அனுஷம் தேர் ; அனுஷம் வேத பாராயணம் |
| 16-11-2023 | வியாழன் | மூலம் தேர் ; மூலம் வேத பாராயணம் |

*20-10-2023; 27-10-2023 03-11-2023;10-11-2023*

வெள்ளிக்கிழமை பூஜை மாலையில் ஸ்ரீமஹாத்ரிபுரசுந்தரி
சமேத ஸ்ரீசந்த்ரமௌளீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை

# முகாம் நிகழ்ச்சிகள்

*முகாம் நிகழ்ச்சிகள் தொடர்ச்சி*



**செப் 6 -** கோகுலாஷ்டமியை முன்னிட்டு விசேஷ பாகவத பாராயணம் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் முன்னிலையில் நடைபெற்றது.

**செப் 8 -** பெங்களூரில் இருந்து வருகை தந்த சிவாசார்யர்களால் கங்கை கரையில் செட்கிங் கோட்டை மைதானத்தில் நடத்தப்பட்ட சண்டி ஹோமத்தில் பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் கலந்து கொண்டு ஆசீர்வதித்து அனைவருக்கும் பிரசாதம் வழங்கி அருளினார்கள்.

**செப் 9 -** இன்று காலை ஸ்ரீ மடம் முகாமில் பக்தர்களுக்கு பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் தரிசனம் அளித்து அருளினார்கள். பின்னர் ஸ்ரீ சுவாமிகளின் முன்னிலையில் யஜுர் வேதத்தில் நக்ஷத்ர தேவதா மந்திர பாராயணம் நடைபெற்றது.

**செப் 13 -** பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாசார்யர் குறித்து அனுக்ரஹ பாஷணம் செய்தருளினார்.

**செப் 14 -** பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் முன்னிலையில் காசி தமிழ் சங்கம் நிகழச்சிகள் நடைபெற்றது.

**செப் 19 -** விநாயக சதுர்த்தியை முன்னிட்டு விசேஷ பூஜைகள் நடைபெற்றது. சம்பிரதாயா பாடசாலை மாணவர்களால் ஸ்ரீ கணேச ஹாரத்தி பாடல்கள் பாடப்பெற்றன. காசி கோடீஸ்வரர் திருக்கோவிலில் 108 தேங்காய்கள் உடைக்கப்பட்டன.

**செப் 21 -** லக்ஷ மோதக மகா கணபதி ஹோமம், அதிருத்ர ஹோமம், சண்டி ஹோமம் நிகழ்ச்சிகள் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் முன்னிலையில் சங்கல்பம் செய்விக்கப்பட்டு ஆரம்பமானது.

செப் 25 - ஜகத்குரு பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் பரிபூரண ஆசிகளுடன் இன்று 5-ம் நாளாக லக்ஷ மோதக மகா கணபதி ஹோமம், அதிருத்ர ஹோமம், சண்டி ஹோமம் நிகழ்வுகள் காசி கங்கை கரையில் நடைபெற்று வருகின்றன. வாரணாசியில் சங்கர மடத்தில் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் சாதுர்மாஸ்ய வ்ரதத்தை அனுஷ்டித்து வருகிறார்கள். ஸ்ரீ மடம் முகாம் கடந்த மூன்று மாதங்களாக பல்வேறு நிகழ்ச்சிகளின் அதிர்வலைகளால் நிரம்பப் பெற்றுள்ளது. விநாயக சதுர்த்தி திருவிழா தருணத்தில் லக்ஷ மோதக மகா கணபதி ஹோமம் விசேஷ சிறப்பு அம்சமாக அதிருத்ர ஹோமம், சண்டி ஹோமம் புனிதமான கங்கை நதிக்கரையில் அன்னபூரணி சமேத ஸ்ரீ விஸ்வநாத சுவாமி க்ஷேத்திரத்தில் சாதுர்மாஸ்ய இறுதி வாரத்தில் விசேஷ சிறப்பு அம்சமாக அமையப் பெற்றுள்ளது.

**செப் 27 - வாரணாசியில் ஓர் ஆன்மீக விழா :**

ஹனுமான் காட்டில் ஸ்ரீ காஞ்சி சங்கராசார்யர் முன்னிலையில் தேனீக்கள் போன்று பல்வேறு நடவடிக்கைகளால் நிரம்பப்பெற்றதாக இருந்தது. 100க்கும் மேற்பட்ட சிவாசார்யர்கள் நிறைந்த காசி கங்கா தீர்த்த சிவாகம சபாவில் பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கலந்து கொண்டார்கள்.

வாரணாசி தேசத்தின் ஆன்மீக தலைமை தலம் என்பதோடு யாத்ரீகர்களின் பயணத்திட்ட கனவு இலக்காகவும் உள்ளதாகும். பெருமைமிக்க கங்கை நதி, அநேக ஆலங்களின் இருப்பிடமாகவும், அதிலும் 12 ஜோதிர்லிங்களில் ஒன்றான ஸ்ரீ விஸ்வநாதர் திருக்கோவிலும் இன்னும் பல்வேறு விசேஷ காரணங்களாலும் புகழ்பெற்றதாகும்.


இந்நகரம் காஞ்சி காமகோடி பீடத்தின் 70வது பீடாதிபதி ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் ஜுலை 5ம் தேதி ஹனுமான் காட்டில் உள்ள சங்கர மடத்தில் சாதுர்மாஸ்ய விரதம் அனுஷ்டிக்க துவங்கியதை முன்னிட்டு கூடுதல் சிறப்பெய்தியது. பிரயாக்ராஜ் திரிவேணி சங்கமத்தில் ஜுலை 3ம் தேதி வியாஸ பூஜை முடித்து இந்நகருக்கு வருகை தந்தபோது பெரும் வரவேற்பளிக்கப்பட்ட நிகழ்வில், காசி முன்னாள் அரசரும் அவர்தம் ராணி மற்றும் காசி மேயர் ஆகியோரும் கலந்து கொண்டார்கள். வெள்ளிக்கிழமையன்று முடிவடைகின்ற தவக் காலம் சங்கட் மோசன் ஹனுமான் திருக்கோவிலுக்கு விஸ்வரூப யாத்திரை புறப்பட்டு அங்கு பகவத் கீதை விஸ்வரூப யாத்திரை பகுதி பாராயணம் செய்யப்பட்டு முடிவடைகிறது. ஸ்ரீஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் தனது குரு ஸ்ரீஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் 1974ல் சாதுர்மாஸ்ய வ்ரதம் அனுஷ்டிக்கப்பட்ட பின்னர் 50 ஆண்டுகள் கடந்து இவ்விரதத்தை இவ்விடத்தில்

அனுஷ்டித்திருக்கிறார்கள். இதற்கும் சற்று முன்னால் சென்றால் 1934ல் 68வது பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மஹா சுவாமிகள் வாரணாசியில் சாதுர்மாஸ்ய விரதத்திற்காக தங்கி இருந்துள்ளார்கள்.

ஹனுமான் காட் சங்கர மடம் தேனிக்கள் போன்று பல்வேறு பணிகள் நடைபெறும் இடமாகும். மறுபுறம் கலாசாரம் மற்றும் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மொழிபேசும் மக்கள் சங்கமமாகும். அக்னி ஹோத்ர சதஸ், விசேஷ தேசிய சதஸுடன் வருடாந்திர பஞ்சாங்க சதஸ், அத்வைத வேதாந்த சதஸ், திருமலை திருப்பதி தேவஸ்தான உதவியுடன் சதுர்வேத பாராயணம், புகழ்பெற்ற வித்வான்களின் சிறப்பு சொற்பொழிவுகள், ஹரி கதா காலக்ஷேபம் போன்றவை கடந்த மூன்று மாத காலத்தில் நடைபெற்றது சிறப்பு அம்சமாகும். இதனிடையே ஆகஸ்டில் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் 88-வது ஜெயந்தி மஹோத்ஸவம் பிரம்மாண்ட முறையில் கொண்டாடப்பட்டது.

ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

## ஸ்வர்ண ரத சேவா



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**
ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# ராஜதரங்கிணி 8

பி. ஆர். கண்ணன்

(தரங்கம் 3 தொடர்ச்சி)

**ராஜா ப்ரவரஸேனர் - II**

குழந்தையாக இருந்த ராஜகுமாரர், ஆன்மீகத் துறையில் ருசியுடன் வளர்ந்து, காஷ்மீரம் திரும்பிவந்து, ராஜ்யபாரத்தை ஏற்க விரும்பினார். ஒருசமயம் அவருக்கு சிவதர்ஸனம் கிடைத்தது. அவர் ராஜபதவிக்காகப் ப்ரார்த்தித்தார். கல்ஹணர் இதை வர்ணிக்கையில்:

**மஹாந்தோ ஹ்யர்திதாஃ ஸ்வல்பம் பலந்த்யல்பேதரத்ஸ்வயம் ।**
**உதந்யயா வதாந்யோதாத்துக்தாப்திம் ஸ பயோர்திநே ।। 276 ।।**

'மஹான்களிடம் அல்ப வஸ்துக்களைப் ப்ரார்த்தித்தால், தானாகவே அவர்கள் பெரும்பலனை வழங்குவர். (சிவன்) வள்ளல் தன்மையுடன், தாகத்தினால் பால் குடிக்கக் கேட்ட குழந்தைக்கு பாற்கடலையே அன்றோ கொண்டு வந்தார்.' உபமன்யு என்ற குழந்தைக்கு, அவன் பிதா வ்யாக்ரபாதரும், அவர் பத்னியும் வறுமையினால் பால் தர இயலாமலிருந்தபோது, உபமன்யு தபஸ் செய்து, சிவதர்ஸனம் பெற்றார். அப்போது நடந்த இச்சம்பவத்தை அழகாகக் கையாள்கிறார் கவி.

**ப்ரவரஸேனர்- II**

ராஜா விக்ரமாதித்யருடன் யுத்தம் செய்ய விரும்பினார். மாத்ரு குப்தருடன் யுத்தத்தை விரும்பவில்லை. ஆகையால் அவர் உஜ்ஜயினியை நோக்கிப் புறப்பட்டார். வழியிலேயே விக்ரமாதித்யர் மரணமடைந்த செய்தியை செவியுற்ற அவர் காஷ்மீரம் திரும்பினார். மாத்ருகுப்தர் இப்போது ராஜ்யத்தை விட்டுவிட்டு, காசி சென்று ஆன்மீக வாழ்க்கை வாழ எண்ணினார். ப்ரவரஸேனர் அவரை ராஜாவாக தொடர்ந்து நீடிக்க வற்புறுத்தியும் கேட்காமல், அவர் காசி சென்றார். ப்ரவரஸேனர் ராஜாவானார்.

கல்ஹணர் ப்ரவரஸேனர், மாத்ருகுப்தர், விக்ரமாதித்யர் ஆகிய மூவருடைய குணத்தை வியந்து:

**அந்யோந்யம் ஸாபிமாநாநாமந்யோந்யௌசித்யஶாலிநாம் ।**

**த்ரயாணாமபி வ்ருத்தாந்த ஏஷ த்ரிபதகாபயஃ ।। 323 ।।**

‘சுயமரியாதையுடன், மற்றவரை மதிக்கும் மாண்பும் பெற்ற இம்மூவருடைய சரித்ரம் மூன்றாகப் பாயும் கங்கையைப் போன்றது.’ கங்கை ஆகாஸகங்கை, பாகீரதி, பாதாள கங்கை என்று ஸ்வர்க்கம், பூமி, பாதாளம் என்ற மூன்று ப்ரதேஸங்களிலும் ப்ரவஹிப்பதை இங்கு கவி நினைவு கூர்கிறார்.

ப்ரவரஸேனர் சிறந்த ராஜாவாகப் பணியாற்றினார். காஷ்மீர சரித்ரத்தில் நற்காலமாக அமைந்தது அவருடைய காலம். பல ப்ரதேசங்களை யுத்தத்தில் வென்றார். அவர் ஷாரீடகா என்ற இடத்திற்குச் சென்று, ஷாரிகா தேவியை தர்சித்ததை கல்ஹணர் குறிப்பிடுகிறார். ஷாரிகா தேவி பல காஷ்மீர குடும்பங்களின் குலதேவியாக விளங்குகிறார். ஷாரீடகா என்கிற இடம் ஷாரிகா பர்வதத்தை (தற்போதைய ஹர பர்வதம்) அந்நாளில் குறித்தது. ப்ரவரேஸவரர் கோவிலை ராஜா நிர்மாணித்தபோது, ஜயஸ்வாமியின் ஸ்வயம்பூ விக்ரகம் தானாகவே கீழ்தளத்தில் அமர்ந்த அதிசயத்தை கவி சொல்கிறார். ராஜா ஐந்து தேவி ஆலயங்களை நிறுவினார். விதஸ்தா நதியின்மீது பாலம் கட்டி, கரையில் ப்ரவரபுரம் என்ற பட்டிணத்தை 36 லக்ஷம் வீடுகளுடன் சிறப்பான முறையில் ஆக்கினார். விதஸ்தா நதியின் குளிர்ந்த ஜலம் கால்வாய்கள் மூலமாக வீடுகளுக்கு வந்தது. ப்ரவரபுரமே இந்நாளைய ஸ்ரீநகர் என்று கருத இடமுள்ளது. இறுதியில் குருவின் ஆக்ஞைப்படி சிவ கைங்கர்யத்தில் ஈடுபட்டு, கைலாஸம் ஏகினார். வானில் அவர் ஒளிவடிவமாக கைலாஸம் சென்றதை ஜனங்கள் கண்டு ஆனந்தித்தனர்.

## ராஜா நரேந்த்ராதித்யர் - II

இந்த ராஜா (லக்கணா என்ற பெயரும் உடையவர்) நரேந்த்ரஸ்வாமிக்கு ஆலயம் எழுப்பினார். எழுத்துவடிவக் கோப்புகளுக்கெனவே ஒரு தனி அலுவலகத்தை ஏற்படுத்திய முதல் காஷ்மீர ராஜா இவர்.

### ராஜா ரணாதித்யர்

துஞ்ஜனா என்ற பெயரும் கொண்ட இந்த ராஜா (கி.பி.217) சக்திவாய்ந்தவராக இருந்தார். அவர் தலையில் சங்கு போன்ற குறி இருந்ததைக் கூறும் கல்ஹணர், ஒரு விசித்ரமான கதையையும் அளிக்கிறார். ராஜா, முன் பிறப்பில் ஒரு சூதாட்டக்காரராக இருந்தவர், கடினமான விந்த்யமலையின்மீது ஏறி, ப்ரமராம்பிகா தேவியை நேரில் ஒரு

அப்ஸரஸ் தோற்றத்தில் தர்ஸனம் செய்தார். அந்த அப்ஸர ஸ்த்ரீயை விவாகம் செய்ய ஆசைப்பட்ட அவருக்கு, அடுத்த பிறவியில் அது ஸாத்யமாகும் என்று வரம் கொடுத்தாள் தேவி. அதனால் இப்போது சோழராஜா ரதிஸேனர் புத்ரியாக அவதரித்த தேவி, ரணாரம்பா என்ற பெயரில் ரணாதித்யரை மணந்தாள். ஆனால் ராஜாவைத் தொட அனுமதிக்கவில்லை.

ராஜா ரணேஸ்வரர், ரணஸ்வாமி ஆலயங்களைக் கட்டினார். அப்போது ஆலய மூர்த்திகள் குறைபாட்டுடன் இருந்தமையால், ராணி, தன் சக்தியால் பரமேஸ்வரனே பார்வதியுடன் விவாகத்தில் பயன்படுத்திய விக்ரகங்களைக் கொண்டு வந்தாள். ராணியின் உபதேசத்தில் சிவ ஹாடகேஸ்வர மந்த்ரத்தைப் பெற்று ராஜா பாதாளத்திற்குப் போகும் சக்தி பெற்றார். ப்ரத்யும்ன மலை மீது (தற்போதைய ஹரி பர்பத், ஷாரிகா தேவி ஆலயம் உள்ள இடம்) பாஶுபதர்களுக்கென மடத்தை ராஜா நிறுவினார்.

கல்ஹணர் ரணாதித்யர் ஆண்ட காலத்தை ராமராஜ்யத்தோடு ஒப்பிடுகிறார்.

**ரணாதித்யஸ்ய கோநந்தவம்ஶ ராமஸ்ய ராகவே ।**
**லோகாந்தரஸுகஸ்யாபி யயோரம்ஶபுஜஃ ப்ரஜாஃ ।। 473 ।।**

‘கோநந்த வம்சத்தைச் சேர்ந்த ரணாதித்யர், ரகுவம்சத்தைச் சேர்ந்த ராமர், இருவருடைய சௌக்யத்தையும், பரலோகத்திலும் ஜனங்கள் அடைந்தனர்‘

**ராஜா பாலாதித்யர்**

இவருடைய ராஜ்யத்தில் (கி.பி.559) சேனாபலத்தை வர்ணிக்கையில் கல்ஹணர்:

**லவணார்ணவபாநேந தர்ஷோத்கர்ஷமிவோத்வஹந் ।**
**யத்ப்ரதாபோ ரிபுஸ்த்ரீணாம் ஸநேத்ராப்யோபஜந்முகம் ।। 478 ।।**

‘இவருடைய சேனையின் பலம் எவ்வாறிருந்ததென்றால், எதிரிகளின் ஸ்த்ரீகள், கண்ணீர்க் கடலின் உப்பு நீரை வெகுவாகக் குடித்தமையால், அதீத தாகத்துடனிருந்தனர்.’ மடவராஜ்யத்தில் பேடரா என்ற செழிப்பான அக்ரஹாரத்தை ராஜா கட்டினார்.

(தொடரும்)

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 12

## ஸ்ரீ ஶங்கர பகவத்பாதர்

ஞானத்தின் மேலான அனுபூதி நிலையில் நின்று கொண்டு உபநிஷத்துக்களுக்கும் வேதாந்த ஸூத்ரங்களுக்கும் உரையெழுதிய பகவத்பாதர், பண்டிதரும் பாமரரும் வாசியற திளைத்து ஈடுபடும்படி பிரகரண நூல்களையும், 'அற்புதமான ஸ்துதிகளையும் இயற்றியுள்ளார். 'ப்ரஸன்ன காம்பீர்யம்' என்று வாசஸ்பதி மிச்ரர் சொல்வது போல் இவரது மொழி தங்கு தடையற்ற பிரவாகம் போல் வரும். வேகம், எளிமை, தெளிவு, ஆழம், கவர்ச்சி, அழகு, சந்தநயம், பொல பொலவென்று அருவி போல் பொழியும். வார்த்தைகளின் கோர்வை இன்னோரன்ன தன்மைகளால் அனைவரையும் ஈர்க்கின்றன. வேதாந்த ப்ரதர்சனத்தில் காணப்படும் அழுத்தமும், வேகமும், பிரகரண கிரந்தங்களில் தெளிந்த சலவென ஓடும் நீரோடையாகி, ஸ்துதி கிரந்தங்களில் ப்ரேம கங்கையாகப் பெருக்கெடுக்கிறது என மாற்று மதத்தினரும், மேல்நாட்டு அறிஞர்களும் கூட ஸ்ரீ சங்கரரின் கூரிய அறிவுத் திறமையையும், அழுத்தமான வாதத் திறமையையும், கண்டு வியக்கின்றனர். 'ஆதி கவி' வால்மீகி போல், 'ஆதி ஆசார்யர்' என்று கொண்டாடத் தகுந்தவர் இவரே என்று கருதுகின்றனர். அரசியல் ரீதியாகவும், மதரீதியாகவும் பிளவுபட்டுக் கிடந்த பாரத தேசத்தைக் கலாச்சாரத்தால் தத்துவ ஞானத்தால் ஒன்றாக இணைத்த பெருமை இவரையே சாரும். இவர் ஒரு சிறந்த சமய சீர்த்திருத்தவாதி. அதே சமயத்தில் பழைமையைச் சிறிதும் விட்டுக் கொடுக்காத ஸநாதனி.

தன் அவதார நோக்கத்தை உணர்ந்தவர். குறிக்கோளை அடையும் வரையில் ஓய்விலாது உழைத்தவர். பல பிறவிகளில் பலரால் சாதிக்க முடியாததை ஒரு பிறவியில் மிகக் குறுகிய கால வட்டத்தில் செய்து முடித்தவர். இன்றும் கற்றோரும் மற்றோரும் வியந்து அன்னாந்து பார்க்க இமயம் போல் உயர்ந்து நிற்பவர். எல்லா சாஸ்திரங்களையும் பூரணமாகக் கற்ற ஸர்வக்ஞரான ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் திருவடித் தாமரைகளில் மிச்சம் மீதியின்றி எல்லா அறிஞர்களும் வீழ்ந்து பணிந்தனர் என்ற பொருள்தரும் ஒரு சுலோகம் கம்போடிய நாட்டிலுள்ள ஒரு கோயில் கல்வெட்டில் காணப்படுகிறது.

**யேநாதீதானி ஶாஸ்த்ராணி பகவஶ சங்கராஹ்வயாத் ।**
**நிஸ்சேஷ ஸூரி மூர்த்தாலி மாலா லீடாங்க்ரி பங்கஜாத் ॥**

சிதறிக் கிடந்த வழிபாட்டு முறைகளைச் சீர்ப்படுத்தி ஷண்மத ஸ்தாபனம் செய்தார். காணாபத்யம், கௌமாரம், ஸௌரம், வைஷ்ணவம், சைவம், சாக்தம் என்ற அறுவகைச் சமய வழிபாடுகளை வைதிக நெறியின் வழியில் தழைக்கச் செய்தார். ஆன்ம நாட்டம் கொண்ட சாதகர்களின் வளர்ச்சி நிலைகளுக்கேற்ப பல பிரகரண கிரந்தங்களையும் ஸ்துதிகளையும் இயற்றியுள்ளார்.

இவரைப் பற்றிய வரலாறு பலரால் எழுதப்பட்டுள்ளது. இவைகளுள் மாதவீய சங்கரவிஜயம், ஆனந்தகிரீய சங்கர விஜயம், சித்விலாஸீய சங்கரவிஜயம், கேரளீய சங்கர விஜயம் அனந்தாநந்த கிரியின் சங்கர விஜயம், போன்றவை சிறந்தவைகளாகக் கருதப் படுகின்றன. இவை தவிர சிவரஹஸ்யம், பதஞ்ஜலி விஜயம், சங்கராப்யுதயம் போன்ற நூல்களும் ஸ்ரீ சங்கர அவதாரம் பற்றி விளக்குகின்றன.

பிரவிருத்தி மார்க்கம் (வைதிக கர்ம நெறி நிற்றல்) நிவிருத்தி மார்க்கம் (சாஸ்திர விஹிதமான வைதிக கர்மங்களைத் துறந்து துறவு நெறி நிற்றல்) என இரண்டு வகை வாழ்க்கை நெறிகளை நமது ஸனாதன தர்மம் பகுத்துக் காட்டுகிறது. முதலாவது கர்ம மார்க்கம், இரண்டாவது ஞான மார்க்கம். இரண்டும் இருட்டும் வெளிச்சமும் போல் இணையாதவை. ஸ்ரீ சங்கரர் அவதரித்த காலத்தில் பிரவிருத்தி மார்க்கத்தில் ஈடுபட்டவர்கள் ஞானமார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஞான மார்க்கத்தில் பயணித்தவர்கள் கர்ம மார்க்கத்தைத் துறந்தது மட்டுமின்றி அதை நிந்திக்கத் தொடங்கினர். இதனால் வேதத்தைக் கூட ஏற்க மறுத்தனர். ஈச்வரனின் இருப்பையும் மறுத்தனர். இதனால் வேத மார்க்கத்திற்குப் புறம்பான மார்க்கங்கள் தலைதூக்க ஆரம்பித்தன.

ஸ்ரீ சங்கரர் சாஸ்த்ர விஹிதமான கர்மங்கள் முக்திக்கு நேரடி சாதனங்களாக பயன்படாவிட்டாலும், பகவான் கீதையில் கூறியபடி யோகமாக மாற்றிச் செய்யப்படும் போது சித்த சுத்தியைக் கொடுத்து சாதகனை ஞானத்திற்குத் தகுதியுடையவனாக்கும். எனவே எக்காரணம் கொண்டும் கர்மங்கள் விடத் தகுந்தவை அல்ல என்று கூறினார். அதே சமயத்தில் கர்ம மார்க்கத்திலேயே செக்குமாடு போல் சுற்றி வரக்கூடாது, ஞான யோகமாகிற ராஜபாட்டையில் பயணிக்க வேண்டும் என்பதையும் உறுதிபடக் கூறினார். இதுபோன்றே முரண்பட்டிருந்த எல்லா சாதனங்களையும் தத்துவங்களையும் ஸம்பிரதாயங்களையும் ஒருங்கிணைத்த பெருமை இவரையே சாரும்.

வைதிக நெறிக்கு முரண்பட்டதாகவும் வைதிக நெறிகளைக் கண்டிப்பதாகவும் இரண்டற்ற அத்விதீய அனுபவ

நிஷ்டையை மறுப்பதாகவுமிருந்த 72 மதங்களை வாதத்தால் வென்றார். இவற்றிலுள்ள ஒவ்வாமைகளை எடுத்துக் காட்டினார். எதையும் அழிக்கவில்லை. வேத நெறிக்கு மாறுபட்டிருந்த மார்க்கங்களின் தோஷங்களை எடுத்துக் காட்டி, அவற்றை நீக்கினார். ஒன்றிற்கொன்று இணையாமலும் விரோத ஸ்வபாவமும் கொண்டிருக்கும் எருதும் சிங்கமும், மயிலும் பாம்பும், சேவலும் மூஞ்சூறும், மானும் புலியும், நீரும் நெருப்பும், அசுரனும் அடியவரும் சிவ குடும்பத்தில் ஒன்றிணைந்து சிவமயமானது போல் எல்லா மதங்களும் தோஷம் நீங்கி இரண்டற்ற அத்வைத நெறியில் ஒன்றாகித் தன்மயமாகின. 'ஸத்'கார்ய வாதத்தில் 'அஸத்'திற்கும் அழிவுக்கும் இடமேது? 'சிவம்' பெருக்கும் அத்வைத நெறியில் 'அசிவ'த்திற்கு இடமில்லை என்பதை ஸ்ரீ சங்கரர் நிரூபித்தார்.

அத்வைத ஸித்தாந்தத்தை ஸ்ரீ சங்கரர் ஸ்தாபிக்கவில்லை. புனருத்தாரணம் செய்தார். காசக்ருத்ஸ்னர், த்ரவிடாசார்யார், ப்ரஹ்ம நந்தி, பர்த்ருப்ரபஞ்சர், பர்த்ருஹரி, ப்ரஹ்மதத்தர், ஸௌந்தர பாண்ட்யர் போன்ற பல மஹான்களால் போற்றி வளர்க்கப்பட்ட பழைமையான வேதநெறி பல்வேறு காரணங்களால் தொய்வடைந்த காலத்தில் அவதரித்து அத்வைத ஸித்தாந்தத்திற்குப் புத்துயிர் கொடுத்தார், புது மெருகூட்டினார். எளிமைப்படுத்தினார். வளம் மிக்க வாழ்வு பெற வழிவகுத்துக் கொடுத்தார். அயர்ந்திருந்த சமூகத்தைத் தட்டி எழுப்பி உயர்வற உயர்நலன் பெறச் செய்தார்.

பூர்வ மீமாம்ஸகர்களின் கர்மானுஷ்டானத்தை ஏற்றார். பௌத்த மதத்தின் மாயாவாதத்தையும் ஏற்றுக் கொண்டார். ஜைனர்களின் அஹிம்ஸா முதலிய கட்டுப்பாடுகளை அங்கீகரித்தார். ஏனெனில் யாவும் வேதத்தில் பிரமாணமுடையவையாக இருந்தன. க்ரூரமும் ஆபாஸமும் நிறைந்திருந்த சைவ வைணவ வழிபாட்டு முறைகளைச் சீர்செய்தார். தத்வரீதியிலான சிந்தனைக்குத் தகுதி பெறாத சாதகர்களுக்கு ஷண்மத ஸ்தாபனம் செய்து ஈச்வர உபாஸனா மார்க்கம் எளிமையானது, எல்லோராலும் கடைப்பிடிக்கக் கூடியது என்று காட்டிக் கொடுத்தார். பக்தி மார்க்கத்தையும் வளப்படுத்தி பொலிவூட்டினார். தாய் போல் போஷித்தார். தந்தை போல் காத்தார். குருவாயிருந்து மெய்ஞானத்திற்கு வழிகாட்டி வேதநல் விளக்கைக் கையில் ஏந்தி கைபிடித்து அழைத்துச் சென்றார். இன்றும் அழைத்துச் சென்று கொண்டிருக்கிறார்.

உபதேசத்தையும் நடைமுறையும் ஒன்றுபடுத்தினார். வேதநெறியை நடைமுறை வேதாந்தமாக்கிக் காட்டினார்.

**'ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய ஸம்பவாமி ஆத்ம மாயயா'** என்று மாயையைத் தன் வசப்படுத்திக் கொண்டு அவதரித்த சமயத்தில் சில இடங்களில் தான் 'ஈச்வரன் என்பதைக் காட்டிக் கொடுக்குமாறு சில நிகழ்வுகளைக் காணலாம். எல்லாக் கலைகளிலும் ஞானத்திலும் உயர்ந்து நிற்கும் 'ஸர்வக்ஞத்வத்'தைச் சில நிகழ்வுகளில் காணலாம். காசியில் ஈச்வரன் பஞ்சமனைப் போல் வந்த சமயத்தில் விலகச் சொல்லும் போது சாதாரண மானுடன் போல் நடித்து, அதன் மூலமும் தத்துவத்தை உலகிற்கு அளித்த வைபவங்களையும் காணலாம்.

உலகிற்கு ஞான வெளிச்சத்தைத் தர வந்த அவதாரம் ஆதலால் முதல் வர்ணத்தில் அவதரித்தார். ஸந்யாஸ கோலம் கொண்டார். ஜகத்குருவாகி எங்கும் ஞானஒளி பரவச் செய்தார். 32-வருடங்கள் மட்டும் வாழ்ந்து, வந்த காரியத்தைப் பூர்த்தி செய்து விட்டு, காஞ்சியில் ஸ்தூல சரீரம் துறந்து யோக மார்க்கத்தில் கயிலை திரும்பினார். இன்றும் ஸ்ரீ காமாக்ஷி அம்மன் திருக்கோயிலில் ஸாந்நித்யத்துடன் வீற்றிருந்து அருள் நிதியை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்.

---

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

## சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன், ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்

# சாணக்ய ஸுபாஷிதம்

**திருத்தம்**

**லாலனாத் பஹ்வோ தோஷா: தாடனாத் பஹவோ குணா:**

**தஸ்மாத் புத்ரம் ச சிஷ்யம் ச தாசயேத் ந து லாலயேத் ॥**

*செல்லம் தருதலில் குறைகள் பல. அடிப்பதில் நிறைகள் பல. புத்ரனையும் சிஷ்யனையும் அதனால் அடிக்கலாம் செல்லம் தர வேண்டாம்.*

**கபடம்**

**யஸ்ய சாப்ரியம் அன்விஸ்சேத் தஸ்ய ப்ரூயாத் ஸதா ப்ரியம்**

**வ்யாகோ ம்ருகவதம் கர்த்தும் கீதம் காயதி ஸுஸ்வரம் ॥**

*யாரை ஹிம்ஸிக்க வேண்டுமோ அவனுடன் இணக்கமாக நடக்க வேண்டும். மானைப் பிடிக்க வரும் வேட்டைக்காரன் நல் கானத்தைப் பாடுவான்.*

**மத்யமம்**

**அத்யாஸன்னா வினாசாய தூரஸ்தா ந பலப்ப்ரதா:**

**ஸேவ்யதாம் மத்ய பாவேன ராஜா வஹ்னிர்குருஸ் ஸ்த்ரிய: ॥**

*அரசன், குரு, நெருப்பு, பெண்கள் இவர்களிடம் அணுகாது அகலாது மத்யமாகப் பழக வேண்டும். அதிக நெருக்கம் நாசம் செய்யும். அதிக தூரம் பலன் கொடுக்காது.*

**சரியான உதவி**

**குணை: ஸர்வக்ய துல்யோபி ஸீதத்யேகோ நிராஸ்ரய:**

**அனர்க்யமபி மாமிகயம் ஹேமாசயமபேக்ஷதே ॥**

*பெரும் பண்டிதனாயிருந்தாலும் சரியான உதவியில்லாமல் சோபிப்பதில்லை. விலை மதிக்க மாணிக்கமாயினும் தங்கத்தைச் சார்ந்துள்ளது.*

**ஏமாற்றல்**

**ஆத்மவர்கம் பரித்யஜ்ய பரவர்கம் ஸமாஸ்ரீத:**

**ஸ்வயமேவ லயம் யாதி யதா ராஜ்யம் அதர்மத: ॥**

*தன் குலத்தை விட்டு எதிரி வர்க்கத்தை பேணுபவன் அதர்ம ராஜ்யம் போல் தானே அழிவான்.*

**காத்தல்**

**ஆபதர்த்தம் தனம் ரக்ஷேத் ரக்ஷேத் தாரான் ரக்ஷேத் தனைரபி**

**ஆத்மானம் ஸததம் ரக்ஷேத் தாரைரபி தனைரபி ॥**

*ஆபத்துக்காக தனம் சேர். தனத்தை விட்டாவது மனைவியை காப்பாற்று. தனத்தையும் மனைவியையும் விட்டாவது தன்னைக் காப்பாற்று.*

**பயங்கரம்**

**மாணிக்ய மணிதாரி ஸர்போ கரோதி மஹதி பணா ।**

**மணினா பூஷிதோமி கிம் அஸௌ ந பயங்கர : ॥**

*மாணிக்ய மணியை தலையில் வைத்துக் கொண்டிருக்கும் பாம்பு படம் எடுத்து ஆடும். மணி அதனிடத்தில் இருந்தாலும் அது பயங்கரமானது தானே.*

**அஞ்சுவது**

**தாவத் பயேன பேதவ்யம் யாவத பயம் அனாகதம்**

**ஆகதம் து பயம் த்ருஷ்ட்வா ப்ரஹர்தவ்யம் அசங்கயா ॥**

*அருகில் வராதவரை அஞ்சவேண்டியதற்கு அஞ்சுக. அருகில் வந்தால் திருப்பி அதை எதிர்கொள்.*

**பழிக்குப்பழி**

**க்ருதே ப்ரதிக்ருதிம் குர்யாத் ஹிம்ஸனே ப்ரதி ஹிம்ஸனம்**

**தத்ர தோஷோ ந பததி துஷ்டே தொஷ்ட்யம் ஸமாசரேத் ॥**

*ஒரு ஹிம்ஸைக்கு ப்ரதி ஹிம்ஸை செய்யலாம். துஷ்டன் செய்யும் துஷ்டச் செயலுக்கு எதிர் துஷ்டச்செயல் செய்வதில் தோஷமாகாது.*

*(தொடரும்)*

# முனிமொழியாகிய திருவாய்மொழியும் அத்வைதமும்

*(வே. நாராயணன், சென்னை)*

*8.* அஞ்சி, நீருலகத் துள்ளீர்! அவன் இவன்
என்று கூழேன்மின் !
நெஞ்சினால் நினைப்பான் யவன் அவனாகும்
நீள்கடல் வண்ணனே *(3, 6, 9)*

*9.* நும்இன் கவிகொண்டு நும்நும் இட்டா தெய்வ மேத்தினால்
செம்மின் சுடர்முடி என் திருமாலுக்குச் சேருமே. *(3, 9, 6)*

*10.* இலிங்கத்திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும்
வலிந்து வாது செய்வீர்களும் மற்றுநும் தெய்வமுமாகி நின்றான்
மலிந்து செந்நெல் கவரிவீசும் திருக்குருகூரதனுள்
பொலிந்து நின்றபிரான் கண்டீர்; ஒன்றும் பொய்யில்லை போற்றுமினே.
*(4,10,5)*

*11.* மூடிவிவள் தனக்கொன் றறிகிலே னென்னும்
மூவுல காளியே என்னும்
கடிகமழ் கொன்றைச் சடையனே என்னும்
நான்முகக் கடவுளே என்னும்
வடிவுடை வானோர் தலைவனே என்னும்
வண்திரு வரங்கனே என்னும்
அடியடையா தாள்போல் இவள் அணுகி
அடைந்தனள் முகில்வண்ண னடியே. *(7, 2, 11)*

*12.* படைப்பொடு கெடுப்புக் காப்பவன் பிரம பரம்பரன்
சிவப்பிரா னவனே. *(8, 4, 9)*

13. அவனே அகல்ஞாலம் படைத் திடந்தான்
அவனே அஃதுண்டுமிழ்ந்தா னளந்தான்
அவனே அவனும் அவனும் அவனும்
அவனே மற்றொல்லாமும், அறிந்தனமே. *(9, 3, 2)*

14. அவாவரச்சூழ் அரியை அய்னை அரனை அலற்றி
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன
அவாவில் அந்தாதிகளால் இவை ஆயிரமும் *(10, 10, 10)*

'வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன என்பதி னின்றும், இக்கிரந்த கர்த்தா ஒரு ஜீவன்முக்தர் என்பது புலப்படுகின்றது.

அத்வைதப்படி, உண்மையாகவுள்ள பாரமார்த்திக தத்துவம் ஒன்றுதான்; இதனைக் குறிக்கும் அடிகள் இவை

1. ஆயே இவ்வுலகத்து நிற்பனவும் திரிவனவும்
நீயே, மற்றொரு பொருளுமின்றி நீ நின்றமையால். *(4, 9, 7)*

2. அவனே அவனும் அவனும் அவனும்;
அவனே மற்றெல்லாமும். *(9, 3, 2)*

3. கடல்ஞாலம் செய்தேனும் யானே
என்னும் கடல்ஞாலம் ஆவேனும் யானே என்னும்
கடல்ஞாலம் கொண்டேனும் யானே என்னும்
கடல்ஞாலம் கீண்டேனும் யானே என்னும்
கடல்ஞால முண்டேனும் யானே என்னும். *(5, 6, 1)*

4. காண்கின்ற நிலமெல்லாம் யானே என்னும்
காண்கின்ற விசும்பெல்லாம் யானே என்னும்
காண்கின்ற வெந்தீயெல்லாம் யாயே என்னும்
காண்கின்ற இக்காற்றெல்லாம் யானே என்னும்
காண்கின்ற கடலெல்லாம் யானே என்னும். *(5, 6, 8)*

5. உற்றார்கள் எனக்கில்லை யாரும் என்னும்
உற்றார்கள் எனக்கிங் கெல்லாரும் என்னும்

உற்றார்களைச் செய்வேனும் யாயே என்னும்
உற்றார்களை அழிப்பேனும் யானே என்னும்
உற்றார்களுக் குற்றேனும் யானே என்னும். (5, 6, 7)

6. கொடியவினை யாது மிலனே என்னும்
கொடியவினை ஆவேனும் யானே என்னும்
கொடியவினை செய்வேனும் யானே என்னும்
கொடிவினை தீர்ப்பேனும் யானே என்னும் (5, 6, 9)

7. கோலங்கொள் சுவர்க்கமும் யானே என்னும்
கோலமில் நரகமும் யானே என்னும்
கோலந்திகழ் மோக்கமும் யானே என்னும்
கோலங்கொள் உயிர்களும் யானே என்னும்
கோலங்கொள் தனிமுதல் யானே என்னும். (5, 6, 10)

8. கற்குங் கல்விக்கு எல்லையிலனே என்னும்
கற்குங் கல்வி ஆவேனும் யானே என்னும்
கற்குங் கல்வி செய்வேனும் யானே என்னும்
கற்கும் கல்வி தீர்ப்பேனும் யானே என்னும்
கற்குங் கல்விச் சாரமும் யானே என்னும். (5, 6, 2)

9. செய்கின்ற கிதியெல்லாம் யானே என்னும்
செய்வானின்ற னகளும் யானே என்னும்
செய்துமுன் இறந்ததுவும் யானே என்னும்

இனி, ஜீவப்ரஹ்மைக்யத்தைக் கூறும் வாக்கியங்களைத் தொகுத்துக் கூறலாம்.

1. காயமும் சீவனும் தானே காலும் எரியும் அவனே (1, 9, 6)

2. தானும், யானும் எல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்தோம். (2, 3, 1)

3. களிப்பும் கவர்வுமற்றுப் பிறப்புப் பிணிமூப் பிறப்பற்று
ஒளிக்கொண்ட சோதியுமாய் உடன்கூடுவதென்று கொலோ?
துளிக்கின்ற வான் இந்நிலம் சுடராழி சங்கேந்தி
அளிக்கின்ற மாயப்பிரா னடியார்கள் குழாங்களையே. (2,3,10)

(தொடரும்)

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஶ்ரீ சுப்பராய சர்மா*

॥ ஓம் ஜ்யேஷ்டச்ரேஷ்டவிதே வேதாந்தபாஸ்கராய நம: ॥

**ப்ராணோபாஸனநிஷ்டோऽயம் ப்ராணஸாம்யகுணான்வித: ।**

**ஜ்யேஷ்டோ பவதி ச்ரேஷ்டச்ச பூஜ்யோ வேதாந்தபாஸ்கர: ॥**

ப்ராணோபாசனை நிஷ்டனாகியிருப்பவன், ப்ராணனைப் போலவே ஜியேஷ்டனும் சிரேஷ்டனும் பூஜ்யனும் ஆகிறான்.

## 15. ப்ராணோபாசகனும் ப்ராணனே!

**யோ ஹ வை ஜ்யேஷ்டம் ச ச்ரேஷ்டம் ச வேத,**

**ஜ்யேஷ்டச்ச ஹ வை ச்ரேஷ்டச்ச பவதி ந ப்ராணோ வாவ**

**ஜ்யேஷ்டச்ச ச்ரேஷ்டச்ச ॥**

**சாந்தோக்யோபநிஷத் 5-1-1**

*எவன் ஜியேஷ்டனும், சிரேஷ்டனும் ஆகிய பிராணனை உபாசனை செய்கிறானோ, அவன் ஜியேஷ்டனும், சிரேஷ்டனும் ஆகிறான். பிராணனே அல்லவா முதல்வனும், சிறந்தவனுமாக இருக்கிறான்.*

இந்த உடல், இந்திரியங்கள், அந்தகரணம், பிராணன் முதலானவற்றின் தொகுப்புக்கு ஸங்காதம் என்று பெயர். இந்த ஸங்காதத்திற்கு பிராணன் தான் முக்கியமானவன். பிராணனே சாரமும். இவன் பரமாத்மாவிலிருந்து, முதலாவதாக வெளிப்பட்டவன். அதனால் இவன் முதல்வனாகிறான். இவனாலேயே இந்தத் தொகுப்பு நிலை பெற்று இருப்பதால் இவன் சிறந்தவனாகவும் கருதப்படுகிறான்.

இவ்வாறு பிராணனே முதல்வனாகவும், சிறந்தவனாகவும் இருப்பவன் என்று தெரிந்து கொண்டு உபாசனை செய்யக் கூடியவன் மக்களின் மத்தியில் முதல்வனாகவும், சிறந்தவனாகவும் விளங்குகிறான். இந்த உபாசகனை சமூகம் கௌரவத்துடன் பூஜிக்கிறது. பிராணனைப் போன்றே பிராணோபாசகனும் உலகத்தில் முதன்மை யானவனாகி எல்லோராலும் போற்றப்படுகிறான்.

॥ ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

**॥ ஓம் ஆலோசனபராய வேதாந்தபாஸ்கராய நம: ॥**

**ஜகத: காரணம் ப்ரஹ்ம கிம் ஜீவா: கதமாகதா: ।**
**சிந்தயந்தி முதா ப்ரஹ்மவிதோ வேதாந்தபாஸ்கர: ॥**

இந்த ஜகத்திற்கு பிரம்மம் எப்படிக் காரணமாயிருக்கிறது? ஜீவர்கள் எப்படிப் பிறந்திருக்கிறார்கள் ? இதை பிரம்ம ஞானிகள் உற்சாகத்துடன் சர்ச்சை செய்கிறார்கள்.

## 16. ஞானிகளுடைய சர்ச்சை

**ப்ரஹ்மவாதினோ வதந்தி, கிம் காரணம் ப்ரஹ்ம குத: ஸ்ம ஜாதா: ।**
**ஜீவாம கேன க்வ ச ஸம்ப்ரதிஷ்டா: । அதி ஷ்டிதா: கேன ஸுகேதரேஷு**
**வர்தாமஹே ப்ரஹ்ம விதோ வ்யவஸ்தாம் ॥**

**ச்வேதாச்வதரோபநிஷத் 1-1**

*பிரம்மஞானிகள் இவ்வாறு சர்ச்சை செய்கின்றனர். இந்த ஜகத்திற்குப் பிரம்மம் காரணமா ? நாங்கள் எதிலிருந்து பிறந்திருக்கிறோம் ? எதனால் ஜீவித்திருக்கிறோம் ? எங்கு போய் சேருவோம் ? சுகதுக்கங்களை ஏன் அனுபவிக்கிறோம் ? உலகின் நடைமுறை எவ்வாறு அமைகிறது ?*

இந்த மந்திரம் நமது பழமையான பாரதீய ஸம்பிரதாய மகிமையைத் தெரிவிக்கிறது. முன் காலத்தில், ரிஷிகள் தபஸ்விகள், சந்நியாசிகள், மகாத்மாக்கள் ஒன்று சேரும் போது பரப்பிரம்ம விஷயத்தையே சர்ச்சை செய்தார்கள். லௌகீக விஷயங்களைப் பற்றிய விசாரம் செய்யவில்லை.

ஆத்ம விசாரத்திலிருந்து ஆனந்தம் கிடைக்கிறது. பரமாத்மாவைப் பற்றிய விசாரத்திலிருந்து நமது அஞ்ஞானம் விலகுகிறது. வேதாந்தங்களில் பிரம்ம விசாரமே செய்யப்பட்டிருக்கிறது. உலகத்திற்கும் பிரம்மத்திற்கும் உண்டான உறவு நமக்கும் பொருந்தும். பரப்பிரம்ம விசாரத்திலிருந்து தான் இந்த உலகத்திற்குக் கல்யாணம், சாந்தி மற்றும் ஆனந்தம் கிடைக்கிறது.

॥ ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥

# புராணக் கதை

*காஞ்சி வாதூலன்*

பகவான் எந்த ரூபத்திலும் வரலாம். பக்தி உள்ளம் இருப்பின் அவரை உணர்ந்து கொள்ளாலாம். இப்படி ஆரம்பித்தார் பௌராணிகர். இன்றைக்கு எந்த கதை என்று சிஷ்யன் வினவ அவர் தொடங்கினார்.

அறுபத்து நாலு நாயன்மார்களில் எல்லா சமூகத்தாரும் உண்டு. அந்தணர் குலம், குயவர் குலம், வேட்டுவர் குலம், என்று பல குலங்கள் உண்டு. அந்தணர் குலத்தில் அம்பர் மாகாளம் என்னும் ஊரில் பிறந்தவர் சோமாசி மாற நாயனார். அவர் குலத்தில் சோம யாகம் நிறைய நடந்திருந்தது. அவருக்கும் ஸோமயாகம் செய்ய ஆசை. தினம் அக்னி ஹோத்ரம் செய்து சிவ வழிபாடு செய்வது அவர் வழக்கம். ஸோம யாகம் சிறியதோ பெரியதோ சிவ பெருமான் நேரில் வந்து அவர் தரும் ஹவிசை வாங்கி கொள்ள வேண்டும் என்னும் ஆசை அவருக்கு உண்டு. இது நடக்குமா என்று அவரே நினைத்தது உண்டு.

கொஞ்சம் திருவாரூர் செல்வோம். திருவாரூரில் ஸுந்தர மூர்த்தி நாயனார் தங்கி இருந்தார். மகா சிவ பக்தர். அவர் சொல்லி சிவ பெருமான் நடப்பார் என்றால் அவர் பக்தி எப்படிப்பட்டது என்று பார்த்துக் கொள்ளலாம். தனக்குச் சுகமில்லையானால் சிவனையே வையக்கூடியவர் அவர். அந்த ஈடுபாட்டை சோமாசி மாறனார் அறிந்தார். அவர் மூலமாக சிவனை யாகத்தில் தரும் ஹவிசை ஏற்றுக் கொள்ள வைப்பது என்று யோசித்தார். ஒரு நாள் அவர் நாயனார் மாளியகைக்குப் போனார். திருவிழா மாதிரி இருந்தது. தேவார ஒலி, வேத ஒலி இதன் நடுவில் நாயனார் இருந்தார். வந்தவருக்கு அதிர்ச்சி. ஸுந்தர மூர்த்தி நாயனார் ஷோக்குப் பேர்வழி மாதிரி இருந்தார். அவரைக் கண்டுப் பேச முடியவில்லை. எப்படியாவது அவருடன் பேச வேண்டும் என்று வந்தவர் அங்கிருந்த ஆரவாரத்தைக் கண்டு மிரண்டு போனார். எப்படியாவது அவரைச் சந்திக்க வேண்டுமென்பதற்காக ஒரு யுக்தி செய்தார்.

நாயனார் கவனத்தை ஈர்க்க தினம் இரண்டு கட்டு தூதுவளைக் கீரையைப் பறித்து திருவாருக்குத் தானே வந்து அவர் வீட்டில் சமையல் செய்பவரிடம் தருவதை வழக்கமாகக் கொண்டார். தினமும் சுந்தரருக்கு தூதுவளை பரிமாறப்படது. அவரும்

அதைப் பொருட்படுத்தவில்லை. ஈசன் திருவிளையாடல் பலத்த மழையில் கீரை முளைக்கவில்லை. திடீரென்று உணவில் கீரை வரவில்லை என்பதை உணர்ந்தார். சமையற்காரனிடம் கேட்க ஒரு ப்ராம்மணர் தினம் கொடுப்பதாகவும் மழையினால் வரவில்லை என்றும் கூற வியந்த சுந்தர பெருமான் அந்தணரைச் சந்திக்க விரும்புவதாகச் சொன்னார். மீண்டும் கீரை வந்த நாளில் ஸோமாசி மாற நாயனாரைக் கண்ட சுந்தரர் மிகவும் அடகக்த்துடன் அவரை வணங்க அவரும் இவரை வணங்கி நின்றார். பின்பு ஸுந்தரரிடம் சிவபெருமான் தான் செய்யும் ஸோமயாகத்தில் ஹவிசைப் பெற சிபாரிசு செய்ய வேண்டினார். ஸுந்தரர் திகைத்துப் போய் நின்றார்.

(தொடரும்)


## வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்

**VEDA RAKSHANA NIDHI TRUST**

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/C. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/C No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank,** West Mambalam A/C. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank,** West Mambalam A/C No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram

A/C No. 411552514 IFSC IDIB b0005085

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN NO ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக்க் கொள்கிறோம்.

Vrnt e.mail : office@vrnt.org <mailto:office@vrnt.org> phone : 24740549

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

1989 ஆம் வருடம் பெரியவாளை என் குடும்பத்தோடு தர்சனம் செய்தேன். அப்போது அவர் அனந்தம் புலியூருக்குப் போயிருக்கிறாயா? குளத்தில் தண்ணீர் இருக்கா? ஓங்காத்துக்கு எதிரில் சிவலிங்கம் இருக்கா? என்று கேட்டார். நான் திரு திருவென்று விழித்தேன் எங்கள் ஊர் அனந்தம் புலியூர். என் தந்தை அவரது பெற்றோர் காலமாகி விட்டதால் அங்கிருந்து வந்துவிட்டார். அந்த ஊருக்குப் போகும் சந்தர்பமே வரவில்லை. பல மாதங்களிக்குப் பின் தர்சனம் செய்யும் போது மீண்டும் அதே கேள்வியைக் கேட்டார். ஒரு முடிவுக்கு வந்தேன்.



நவம்பர் மாதம் பெங்களூரிலிருந்து கும்பகோணம் சென்றோம். அனந்தம் புலியூர் அருகில் இருப்பதால் பயணம் தொடங்கினோம். ஆனால் இருள் சூழ்ந்தது, மழை தொடங்கியது. எங்களுக்குப் பயம் வந்து விட்டது. என் முன்னோர் வாழ்ந்த இடத்தைப் பார்க்க முடியாமல் போகிறோமே என்று வருத்தம். மகா பெரியவாளைத் த்யானம் செய்து கொண்டேன். எங்கள் கார் ஒரு வீட்டு வாசலில் நின்று விட்டது. நான் கீழே இறங்கி பெரியவா யாரேனும் இருந்தா கூப்பிடு என்று அங்கு விளையாடிக் கொண்டிருந்த சிறுவனிடம் சொன்னேன்.

உள்ளேயிருந்து ஒரு வயசானவர் வந்தார். நான் அவரிடம் 'என் தாத்தா வீரராகவர். இந்த ஊரில் இருந்தார்'' என்றேன். அவர் கண்ணில் நீர் தளும்ப என்னைக் கட்டிக் கொண்டு' என் சித்தப்பா மணி ஐயர் பிள்ளையா நீ? உள்ள வா ஓங்க அப்பா ஒல்லியா ஒசரமா இருப்பாரில்லையா? என்றார் அந்தப் பெரியவரின் பெயர் அருணாசலம். அவரிடம் பெரியவா கேட்டதைச் சொன்னோம்.

ஒரு பையனை கோவிலுக்குச் செல்ல துணையாக அனுப்பினார். அது ஒரு காளி கோவில். பெரியவா சொன்ன குளம் தண்ணீர் நிரம்பி இருந்தது. ஒரு மரத்தடியில் பெரியவா சொன்ன சிவலிங்கம் இருந்தது.

நான் அவரிடம் மகா பெரியவா புலியூர் நடேசய்யரைத் தெரியுமா என்று அடிக்கடிக் கேட்பார் என்றேன். அவர் 'இந்த வீட்டில்தான் இருந்தார் அவர் ராமர், லக்ஷ்மணர், சீதை, ஹனுமார் விக்ரகம் வைத்துப் பூஜை செய்வார். பராமரிக்க முடியாமல் கோவிலுக்குக் கொடுத்தாயிற்று. மருத்துவக் குடியில் அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கோவிலைப் பார்த்துக் கொள்கிறார்கள். நம் ஆத்து ராமரும் அங்கதான் இருக்கிறார்' என்றார். புலியூர் வீட்டில் இருக்கும் பலாப்பழம் அதி ருசியாயிருக்கும் என்பார்களே என்றேன். அந்த மரம் 1985 ஆம் வருடம் வேரோடு சாய்ந்து விட்டது. அதன் ஒரு பாகம் பிள்ளையார் மாதிரி இருக்க அதைப் பத்ரப்படுத்தி உள்ளனர் என் தந்தை காலமான தினத்தில் பலாமரம் சாய்ந்தது என்றும் அறிந்தோம். பின்பு மருத்துவ குடிக்குச் சென்று ராமரைத் தர்சனம் செய்து கொண்டு திரும்பினோம்.

இரண்டு நாட்களுக்குப் பின் காஞ்சீபுரம் வந்து பெரியவாளிடம் அனைத்து விவரங்களையும் கூறினோம். சிவலிங்க போட்டோவைக் காட்டினோம். அடடா சிதிலமாகி விட்டதே என்றார். காளி கோவிலுக்குப் போனாயா என்றார். விவரமனைத்தையும் சொன்னபின் நான் எங்களுக்கு குல தெய்வம் ஸ்வாமிமலை முருகனா, இந்த காளியா என்று கேட்டேன். அவர் சிரித்துக் கொண்டே இரண்டும்தான் என்றார்.

எம் முன்னோர்கள் வாழ்ந்த இடத்தைப் பார்க்கவும் வருடா வருடம் மாவிளக்குப் போடும் காளியைத் தர்சனம் செய்யும் பாக்யமும் எங்கள் முன்னோர் வழிபட்ட ராமரை வணங்கும் பாக்யமும் பெரியவா அனுக்ரகத்தால் கிடைத்தது என்பதை நினைத்து நினைத்துப் பூரிப்படைகிறோம்.

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலம் மட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர். **வே. ராகவன்** - தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் : **ஜயவிஜயா**

## சாந்தி பர்வம்



புத்ர பௌத்ரர்கள் பந்துக்கள் அனைவரும் யுத்ததில் மடிந்துவிட கிடைத்த ராஜ்யத்திற்கு அரசனாவதை யுதிஷ்டிரர் விரும்பவில்லை. வ்யாஸராலும், க்ருஷ்ணராலும் ஸமாதானம் அடைந்தபின் அவர் ஹஸ்தினாபுரம் சென்றார். அரண்மனையில் மகிழ்ச்சியுடன் தங்க ஆஸனத்தில் அமர்ந்தார்.

பின்பு குடிமக்கள் அனைவரும் தங்கள் தலைவர்களுடன் மங்கலப் பொருள்களை அவருக்கு ஸமர்ப்பித்தனர்.

புலித்தோல் மூடிய ஆசனத்தில் அவரும் த்ரௌபதியும் அமர க்ருஷ்ணர் ராஜ்ய அபிஷேக நீரை ஒரு சங்கில் நிரப்பி அவருக்கு அபிஷேகம் செய்து இவரே ''மன்னர்'' என்று அறிவித்தார். விழா கொண்டாட்டங்கள் முடிய அனைவரையும் அனுப்பிவிட்டு க்ருஷ்ணரிடம் ''யுதிஷ்டிரர்'' மூவுலகும் நீர் வ்யாபித்துள்ளீர். உமது அருளால் எமக்கு இந்த ராஜ்யம் கிடைத்தது என்று கூறி வணங்கி நின்றார். அதற்கு பகவான் பதிலளிக்கவில்லை. ஏதோ த்யானத்தில் இருந்தார்.

யுதிஷ்டிரர் ஸ்வாமி ! ஏதோ ஆழ்ந்த த்யானத்தில் இருப்பது போல் உள்ளது?

க்ருஷ்ணர் ஆம் முட்படுக்கையில் படுத்திருக்கும் மகான் பீஷ்மர் என்னை நினைக்கிறார். என் மனது அவரிடம் சென்றுவிட்டது. தர்மங்கள் அனைத்தையும் அறிந்தவர் அந்த மகாத்மா. அவர் மடிய இவ்வுலகம்

சந்த்ரனில்லாத அந்தகார உலகமாகிவிடும் பீஷ்ம பிதாமகர் இறந்து விடின் பல ஞான விஷயங்கள் மறைந்து விடும். எனவே அவர் காலடி பற்றி அவைகளைத் தெரிந்து கொள்.

பின்பு க்ருபர், க்ருஷ்ணர் பாண்டவர்கள் அனைவரும் பீஷ்மரைக் காணச் சென்றனர்.

ஓகவதி நதியின் கரையில் குருக்ஷேத்ரத்தில் முட் படுக்கையில் படுத்திற்கும் பீஷ்ம பிதாமஹரை கண்டனர்.

மகானே இந்த யுதிஷ்டிரருக்கு இப்போது அரசாட்சியில் பல ஐயங்கள் எழுந்துள்ளன.

அதைப் போக்க உம்மைப் போல் ஒருவரால்தான் முடியும். அவரது ஐயங்களை போக்கவும் என்று க்ருஷ்ணர் சொல்ல அவரும் உன்னை நினைத்த மாத்ரத்தில் யுவன் ஆகிவிட்டேன். பேசுவதற்கு எனக்கு பலம் வாய்த்துள்ளது, நீர் கூறியபடியே உபதேசிப்பேன் என்றார்.

பீஷ்மரின் தர்ம உபதேசங்கள்

**நமோ தர்மாய மஹதே நம: க்ருஷ்ணாய வேதஸே**
**ப்ராம்மணேப்யோ நமஸ்க்ருத்ய தர்மான் வக்ஷ்யாமி சாஸ்வதம்.**

பெரிதான தர்மத்திற்கு நமஸ்காரம். க்ருஷ்ணனான உனக்கு நமஸ்காரம். ப்ராம்மணர்களை வணங்கி சாஸ்வதமான தர்மங்களைச் சொல்லுவேன்.

அரசே! ப்ராம்மணர்களையும், தேவர்களையும் முதலில் பூஜை செய்வது குடிகாத்தலில் முதன்மையாகும். முயற்சி எல்லா வெற்றியையும் தரும். விதியின் மீது பழி போட்டு காலம் கடத்தாதே. ஊழையும் உப்பக்கம் காணலாம் நல் முயற்சி இருந்தால்.

கார்யம் சித்தியாக வேண்டுமெனின் உண்மையும் நேர்மையும் வேண்டும். ஒரு அரசன் மிகவும் மென்மையாக இருந்தாலும் அழிவான். மிகவும் கடுமையாக இருந்தாலும் அழிவான். எனவே இரண்டையும் அளவோடு பயன்படுத்த வேண்டும். எந்த விதத்திலும் வ்யஸனம் (மது, வேட்டை, சூதாட்டம்) அரசனைத் தீண்டக்கூடாது. தனக்கு எது நல்லது என்று பாராமல் ப்ரஜைகளுக்கு எது நல்லதோ அதைச் செய்ய வேண்டும்.

ஒரு புத்ரன் தன் வீட்டில் எப்படி சுதந்திரமாய் செல்வானோ அப்படி ப்ரஜைகள் எந்த அரசாட்சியில் உலவுவரோ அதுவே சிறந்த அரசாட்சி. ஒரு அரசன் எதிரிகளை

ஜயிக்கும் முன் தன்னை ஜயிக்க வேண்டும். காமக் க்ரோதத்தை விட்டு அறம், பொருளை நாட வேண்டும்.

அர்த்தம் தான் முக்யம் என்று எண்ணி வரிகள் பலவற்றை மக்கள் மீது திணிக்கக் கூடாது. அப்படி செய்பவன் அழிவான். ஏழைகள் வயது முதிர்ந்தோர், விதவைகள், அனாதைகள் இவர்களின் யோகக்ஷேமத்தையும் வாழ வழியையும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

நல்லரசாட்சியில் திருடர்களும், யாசகர்களும் இருக்கக் கூடாது. துர்பலன், பாம்பு, தபஸ்வி இவர்களுடைய பார்வை கொடூரமானது. துர்பலனின் பார்வையிலிருந்து தப்ப வேண்டும்.

துர்பலமான மக்களை அவமதிக்காதே. அவர்களது தாபம் உன்னையும் உன் மக்களையும் அழித்துவிடும். அவமானப்படுத்தப்பட்ட துர்பல மக்கள் தனக்கு காப்பாளன் இல்லாத அரசை அழிப்பர். தண்ட நீதி அரசனை அழிக்கும். பொய் குற்றம் சாட்டப்பட்ட துர்பல மக்களின் அழுகை அரசன், மற்றும் அவன் கிளைகள் அனைத்தையும் அழிக்கும்.

*(தொடரும்)*

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை ।। 12 ।।**

உண்பவர்களுக்கு நல்ல உணவுகளை உண்டாக்கிக் கொடுப்பதும், உண்பவர்களுக்குத் தானும் உணவாக ஆவதும் மழையே (நீரே) ஆகும். (உணவுக்கு முக்கிய காரணமும் துணைக் காரணமும் நீரேயாகும்)

*குறள் : 12*

தண்ணீர் தேவதைகளே ! தண்ணீர் நாங்கள் குடிப்பதற்கு உகந்தது ஆகட்டும். நீங்கள் எங்களுக்கு மங்களத்தைத் தாருங்கள்.

*(ரிக்வேதம் : மார்ஜன மந்த்ரம் : 8- 352)*

# அபீதகுசாம்பா ஸ்தவம்
# अपीतकुचाम्बा स्तवम्

அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் மிகுந்த ஜ்வரத்தில் இருக்கும் போது அருளிய ஸ்தோத்ரம். இன்றும் திருவண்ணாமலையில் தீபாராதனை முடிந்தவுடன் இந்த ஸ்தோத்ரம் துதிக்கப்படுகிறது. ஸ்ரீ பெரியவா இதன் மகிமையை உணர்ந்து அடையபலம் பார்வதி அம்பாள் சன்னிதியில் கல்வெட்டாக அமைத்துள்ளார்கள். குழந்தைகளுக்கு மனப்பாடம் செய்வித்து தினமும் பாராயணம் செய்தல் நலம்.

आनन्दसिन्धुलहरीम् अम्रुताम्शुमौले: आसेविनाम् अम्रुतनिर्मितमक्ष्णो:
आनन्दवल्लिविततेरम्रुत आर्द्रगुछ्छम् अम्ब स्मराम्यहम् अपीतकुचे वपुस्ते ।। १ ।।

**ஆனந்தஸிந்துலஹரீம் அம்ருதாம்சுமௌலே:**
**ஆஸேவினாம் அம்ர்த நிர்மிதவர்த்திமக்ஷ்ணோ:**
**ஆனந்தவல்லிவிததேரம்ருதார்த்ரகுச்சம் அம்ப**
**ஸ்மராம்யஹம் அபீதகுசே வபுஸ்தே ।। 1 ।।**

உண்ணாமுலையாள் என்ற தாயே! சந்த்ரனை தலையில் தாங்கிய சிவபெருமானுக்கு ஆனந்தக்கடல் வெள்ளமாயும் சரணடைபவர் கண்களுக்கு அமுதத்தால் செய்யப்பட்ட வர்த்தி போன்றதும் ஆனந்தமாகிற கொடி பரப்பின் அமுதத்தில் நனைந்த பூங்கொத்து போன்றதுமான உனது தோற்றத்தை நான் ஸ்மரிக்கிறேன்.

निर्निद्रकोकनद कोमलकान्तमम्ब नित्यमब सुधानिकरवर्षीमब पदमब त्वदीयम्
मूछ्र्छाकरज्वररुजा मम तापितस्य मूह्र्द्रि क्षणम् सक्रुत् अपीतकुचे निह्देहि ।।२।।

**நிர்னித்ரகோக்னதகோமலகாந்தமம்ப**
**நித்யம் ஸுதா நிகரவர்ஷீ பதம் த்வதீயம் ।**
**மூர்ச்சாகரஜவர்ருஜா மம தாபிதஸ்ய**
**மூர்த்னி க்ஷணம் ஸ்க்ர்தபீதகுசே நிதேஹி ।। 2**

உண்ணாமலை அம்ப! மலர்ந்த செந்தாமரைப் பூவின் அழகான காந்தி போன்ற காந்தியுடையதும் எப்பொழுதும் அமுத வெள்ளத்தைப் பொழிவதும் உனது பாதத்தை மூர்ச்சைத் தரும் ஜ்வர ரோகத்தால் வாட்டப்படும் எனது சென்னியில் ஒரு நொடி வைத்து அருள்வாய்.

शीताम्शुकोटिसुषमाशिशिरैः कटाक्षैरव्याजभूत करुणारसपूरपूर्णैः
कर्पूरहृद्‌दूलिमिव दिक्षु समाकिरद्भिः अमब क्षणम् स्नपय माम् अरुणाद्रिमान्ये ।। ३ ।।

***சீதாம்சுகோடிஸுஷமாசிசிரை:***
***கடாக்ஷைரவ்யாஜபூதகருணாரஸபூரபூர்ணை:***
***கர்பூரதூலிமிவ திக்ஷு ஸமாகிரத்பிரம்ப க்ஷணம்***
***ஸ்னபய மாம் அருணாத்ரிமான்யே ।। 3***

அருணகிரிநாதனால் கொண்டாடப்பட்டவளே. கோடி சந்த்ர நிலவு போல் குளிர்ந்து எக்காரணமுமில்லாமல் பூதங்களிடத்திலுள்ள அருளாகிற ஜலப்பெருக்கினால் நிறைந்து எல்லா திக்குகளிலும் கற்ப்பூரப் பொடியைப் போல நன்றாகத் தூவுகின்ற உனது கடைக்கண் பார்வைகளினால் என்னை க்ஷண நேரம் நனைப்பாயாக.

आविर्भव क्षणमब अपीतकुचे पुरस्तादम्ब ज्वरेन महता मम तापितस्ययेन
त्वदन्घ्रिरुचिजालसुधाप्रवाहे मग्नस्तदैव तनुतापममुमब त्यजेयम् ।। ४ ।।

**ஆவிர்பவ க்ஷணமபீதகுசே புரஸ்தாதம்ப**
**ஜ்வரேன மஹதா மம தாபிதஸ்ய யேன ।**
**த்வங்க்ரிருசிஜால ஸுதாப்ரவாஹே**
**மக்னஸ்ததைவ தனுதாபமமும்த்யஜேயம் ।। 4**

அபீதகுசே! பெரும் ஜ்வரத்தால் பாதிக்கப்பட்ட என் எதிரில் தோன்றுவாயாக. உன் பாதங்களின் காந்தியாகிற அமுத வெள்ளத்தில் மூழ்கினவனாக இந்த தேஹத்தில் உள்ள வெப்பத்தைப் போக்கிக் கொள்வேன்.

नानाविधैं नलिनजातलिपिप्रक्लुप्तैः आनीतमूर्छमधिकम् क्षुभितैं ज्वराद्यैः
आश्वासय क्षणम् अपीतकुचे कराग्रक्रीडाकनत्कनकहल्लकसौरभेण ।। ५ ।।

**நானாவிதைர்னலின ஜாதலிபிபிர்க்ல்ருப்தை**
**ஆனீதமூர்ச்சமதிகம் க்ஷுபிதைர்ஜ்வரார்தை:**
**ஆஸ்வாஸய க்ஷணமபீதகுசே**
**கராக்ரக்ரீடாகனத்கனக்ஹல்லகஸௌரபேண ׀׀ 5**

அபீதகுசே! தாயே! ப்ரம்மலிபியினால் ஏற்படுத்தப்பட்டதும் கஷ்டம் தருவதும் பலவிதமான ஜ்வரம் முதலியவற்றால் ஏற்பட்டதும் சோர்வையுடைய என்னை உன் கை நுனியினால் விளையாட்டுக்காக விளங்கும் செங்கழு நீர் மலரின் நறுமணத்தினால் தேற்றுவாயாக.

कन्टे विषम् विषमुचो भुजगा: कपर्दे पार्श्वे चभूतपतय: प्रमथाच्च भीमा:
सोनाचलेशमुपसृत्य भजेत को वा न स्यात् तवाम्ब सविधे यदि सन्निधानम् ।। ६ ।।

**கண்டே விஷம் விமுசோ புஜகா:**
**கபர்தே பார்ஸ்வே ச பூதபதய: ப்ரமதாச்ச பீமா:**
**ஸோணாசலேசமுபஸ்ருத்ய பஜதே கோ வா ந**
**ஸ்யாத் தவாம்ப ஸவிதே யதி ஸன்னிதானம் ׀׀ 6 ׀׀**

கண்டத்தில் விஷம், சடைமுடியில் விஷம் கக்கும் பாம்புகள், பக்கத்தில் அச்சம் தரும் பூதங்களும் உன் சேர்க்கை இல்லாது போனால் அருணகிரி நாதனை எவன்தான் கிட்டி பஜிப்பான்!

शक्तिर्जगजनन्भन्जनेषु भोगेषु दिव्यमहिषी तरुणेन्दुमौले:
सिद्दि: करप्रनयिनी तव सन्निधानम् यन्नासि तस्य तगपीतकुचे न जाने ।। ७ ।।

**சக்திர்ஜகஜ்ஜனனபாலனபஞ்சனேஷு போகேஷு**
**திவ்ய மஹிஷீ தருணேந்துமௌலே:**
**ஸித்தி: கரப்ரணயினீ தவ ஸன்னிதானம்**
**யன்னாஸி தஸ்ய ததபீதகுசே ந ஜானே ׀׀ 7 ׀׀**

சந்த்ரசேகரனுக்கு உலகத்தை ஆக்குவதிலும், காப்பதிலும், அழிப்பதிலும் சக்தியாக உள்ளாய். ஸுகானுபங்களில் மஹிஷியாய் உள்ளாய். உன் சேர்க்கை கைகண்ட பலனான ஸித்தி. நீ சிவபெருமானுக்கு எம்மாதிரி இல்லையோ நான் அறியேன். (எல்லா விதத்திலும் நீ சிவபெருமானுக்குப் பொருத்தம்.)

त्वम् साक्षिणी प्रलय भैरव ताण्दवानाम् त्वम् शोषिणी सहरिताद्रुश चराचराणाम त्वम् मोचिनी सकलसम्स्रुति जालकानाम् त्वाम् ब्रह्म सम्विदम् अपीतकुचे नमामि ८

**த்வம் ஸாக்ஷிணீ ப்ரலயபைரவ தாண்டவானாம்**
**த்வம் ஸோஷிணீ ஸஹரிதாத்ருஸ சராசராணாம்**
**த்வம் மோசினீ ஸகலஸம்ஸ்ருதிஜாலகானாம் த்வாம்**
**ப்ர்ஹ்ம்மவிதமபீதகுசே நமாமி ।। 8 ।।**

ப்ரளயகால பைரவ தாண்டவத்திற்கு நீ ஸாக்ஷி, விஷ்ணு ப்ரம்மா முதல் சராசரங்கள் அனைத்தையும் ஒடுக்குகிறாய். எல்லாவித ஸம்சார தலைகளிலிருந்தும் விடுவிக்கிறாய். அபீதகுச தாயே! நான் ப்ரம்ம ஞானமான உன்னை வணங்குகிறேன்.

**விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து**
**உள்நின்று உடற்றும் பசி ।। 12 ।।**

*மழையானது தேவையான காலத்தில் பெய்யாமல் இருந்து விட்டால், கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் பசியானது நிலைத்து நின்று எல்லா உயிர்களையும் துன்புறுத்தும்.*

*குறள் : 13*

*பிரம்மத்தில் இருந்து சூரியனும் சந்திரனும் மேகங்களும் தோன்றுகின்றன. மேகங்கள் பொழியும் மழையில் இருந்து பூமியின் மீது தாவரங்கள் தோன்றுகின்றன.*

*(முண்டக உபநிஷத் : 2-1-5)*

*கேள்வி : எல்லோருடைய ஜீவனத்துக்கும் காரணம் எது ?*

*பதில் : மழை*

*(ப்ரச்னோத்தர ரத்னமாலிகா)*

# பாராயண பக்கம்

எகம்பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுருவானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்று இங்கு அறியேன் போற்றி
குற்றாலத்து எம் கூத்தா போற்றி
கோகழிமேவிய கோவே போற்றி
ஈங்கோய்மலை எம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத்து அழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க்கு அருளும் அப்பா போற்றி
இத்தித் தன்னிங்கீழ் இரு மூவர்க்கு
அத்திக்கு அருளிய அரசே போற்றி
தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி (திருவாசகம்)

**ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்**
**வாரி வளம்குன்றிக் கால் ।। 14 ।।**

*மழை நீர் எனப்படும் வரவானது செழிப்பாக இல்லாமல் குறைந்து விட்டால், உழவர்கள் ஏரினால் உழமாட்டார்கள்.*

*குறள் : 14*

*கேள்வி : பயிரிடுபவர்களுக்கு எது சிறந்தது ?*

*பதில் : பயிரிடுபவர்களுக்கு மழை சிறந்தது.*

*(மகாபாரதம் : வனபர்வம்: யக்ஷப்ரச்னம்:)*